உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௪	வெகுதானிய, வைகாசி	மலர் ௨

பாலைநில வருணனை

கவிராஜபண்டிதர், திரு. ரா. திம்மப்ப ஐயர் அவர்கள், சேலம்.

பொருளிலக்கண முறையையொட்டித் தமிழ்மொழியில் நிலம் நான்காக வகுக்கப்பட்டுளது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தலென்பன அதன் பிரிவுகளாம். மலையும் அதனைச்சார்ந்த இடமும் குறிஞ்சி; காடும் அதனைச்சார்ந்த இடமும் முல்லை; நாடும் அதனைச்சார்ந்த புலமும் மருதம்; கடலும் அதனையடுத்த இடமும் நெய்தல். இவ்வாறாய காரணத்தாற்றான், இப்பூமண்டலம் நானிலம் எனக் காரணக்குறியாக வழங்கலாயிற்று. பாலையென்று ஒன்றுண்டன்றோ? அதனைச் சான்றோர் மேற்கூறிய நான்குடன்சேர்த்து ஐந்தாவதாக வழங்கிற்றிலரோ? வெனின், வழங்கிற்றிலர், என்னை?

" முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும் "

என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்துக் கூறியிருத்தலா லென்க. இதனால் முறைமையிற்றிரிந்து தத்தம் இயற்கை நலங்

களறவே யழியப்பெற்ற காட்டுப் பாங்கரும் மலைப்பாங்கருமாய முல்லை குறிஞ்சிப் புலங்களே பாலையென்ற நிலமாகுமென்பது பெறப்படும்.

ஆகாயத்திலே செல்லுகிற விளங்குகிற ஒளியையுடைய சூரிய மண்டலம் நெருப்புப் போலச் சிவந்த உஷ்ணத்தை வீசுதற்கிடமான அந்தக்காட்டில் இலையில்லாமலும் மலருந்தன்மையுள்ள அரும்பில்லாமலும் இருக்கிற இலவமரம் என்றபொருள் அமைந்த,

"வான மூர்ந்த வயங்கொளி மண்டில
நெருப்பெனச் சிவந்த வுருப்பவி ரங்காட்
டிலையில மலர்ந்த முகையி லிலவம்"

(அகநானூறு, களிற்றியானை நிரை 11-செய்யுள்.)

என்ற அகநானூற்றடிகளால் முல்லை நிலமானது தன் நிலைமை திரிந்து பாலையாயினவாறு காண்க.

பிறரால் சீறுதற்கரிய மழுவாயுதத்தையுடைய பரமசிவன் கோபித்தலினாலே அந்த முப்புரம் அழித்தலைப்பெற்று உதிர்வனபோல மலைகள் பிளந்துபோவார்க்கு வழியில்லையாக வீழ்ந்து குறுக்கிட்டுக் கிடந்த வெம்மை விளங்குந் தொலையாத வழியிடையிலே என்ற கருத்தமைந்த,

"சீறருங் கணிச்சியோன் சினவலி னவ்வெயி
லேறுபெற் றுதிர்வனபோல் வரைபிளந் தியங்குந
ராறுகெட விலங்கிய வழலவி ராரிடை"

(கலித்தொகை, பாலை-1 செய்யுள்)

என்னுங் கலித்தொகை யடிகளால் குறிஞ்சி முறைமை திரிந்து பாலையானதன்மை பெறப்படும்.

சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார், 'முல்லையுங் குறிஞ்சியும்...........கொள்ளும்' என்ற தொடர்க்குரைவகுத்துக் குறிப்புரையின்கீழ் இம்மேற்கோள்களையே யெடுத்துக் காட்டியுள்ளார்.

'தொல்காப்பியனார் பாலைக்கு நிலம் வேண்டிற்றிலர்; வேண்டாமையின் தெய்வமும் வேண்டிற்றிலர்; பிறர், பகவதியையும் ஆதித்தனையும் தெய்வமென்று வேண்டுவர்' என்ற இறையனாரகப்பொருளுரையும் ஈண்டுக்காணற்பாலதாம்.

'நடுவ ணைந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே'

என்ற தொல்காப்பியச்சூத்திரத்தாலும், அதன் உரையாலும் மேற்குறித்த இறையனாரகப் பொருளுரைக்கருத்து நன்கு புலனாகும்.

கொடுந்தன்மையாலல்லாமல் குடிகளைப்பாதுகாவாத அமைச்சருடன் கூடிக்கொண்டு நாள்தோறும் ஆராய்ந்து அரசியல் புரியாமல் வேந்தனாயினான் ஒருவன் செங்கோல் திறம்பப்பெற்றால் அவனாட்சிக்குட்பட்ட நிலம் பாழாய்ப் போம். 'அதுபோல முதிர்ந்தகோடையாகிய மந்திரியுடன் சேர்ந்து வெவ்விய விளக்கமுற்ற சூரியனாகிய மன்னன் வெம்மை மிகக் கொண்டதனால், முல்லைகுறிஞ்சியென்னும் இருவகை நிலங்கள் தத்தம்' முறைமைதிரிந்து நல்லியல்பிழந்து நடுங்கு துயர்காட்டிப் பாலையாக மாறுவவாயின என்ற கருத்துப் போதர,

'கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி
வேத்திய விழந்த வியனிலம் போல
வேனிற் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
றானலந் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற்றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்'

என்று சிலப்பதிகாரவாசிரியர் இந்நிலங்கள் பாலையாக மாறி யமைக்குத்தக்க உவமை கொடுத்துப்போந்தது சாலவும் வியக்கற்பாலது.

இதற்கு மாறாக, முருகன்போதரலால் பாலைவனமானது தனது மிக்கவெப்பமாறித்தண்ணளி நிறைந்து குளிர்பூங் குறிஞ்சியாக மாறியது என்ற கருத்தமைத்துக் கந்தபுராண வாசிரியராகிய கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் வருணித்தநயம் விம்மிதத்தைப் பயப்பதொன்றாமாகலின் அப்பாசுரத்தைத் தெள்ளிதின் விள்ளலுற்றேம்.

எமது தலைவனாகிய முருகக்கடவுள் யாவராலும் பொறுக்க முடியாத கொடுமையையுடைய அக்கினிதேவனது அந்நிலத்து அரசாட்சிமுறைமையைத் தவிர்த்து, வருணதேவனுக்குக் கொடுத்தருளினான் என்று சொல்லும்படி அந்தப்பாலைநில மானது மிகுதியான வெப்பம் நீங்கியொழியப்பெற்று யாவருங் கொண்டாடத்தக்க நீர்வளப்பத்துடன் மிக்க குளிர்ச்சியை யடைந்தது என்ற பொருளமைந்த

'ஆற்றருந்திற லங்கிதன் னரசியன் முறையை
மாற்றி யெம்பிரான் வருணற்கு வழங்கினனென்ன
வேற்றமாகிய வெம்மைபோய் நீங்கியே யெவரும்
போற்று நீரொடு தண்ணளி பெற்றதப்புவியே'

என்ற அழகிய பாசுரம், நந்தம் மொழியையும் முருகன்றிரு வருளையும்போலக் குளிர்மணந்துளும்ப விளங்குதல் களிப்பு மிகத்தருவதாகும். கவிவேந்தர்களாகிய கச்சியப்ப சிவாசாரியர், கம்பர், சங்கச்சான்றோராதியாய புலவர் பெருமக்கள் இவ் விடயமாக வருணித்தமை, உளங்கொளாக்களிநலம் அளிப்ப வாகும்.

இத்தகைய பாலைவனத்தின் வருணனை விடயமாகப் புலவர் பெருமக்களாகிய (கச்சியப்பரும் கம்பரும்) கூறியுள்ள தகைமை களையினிக் காண்போம்.

முருகக்கடவுள் திருவாரூரினின்று புறப்பட்டுத்தென்றிசை நோக்கிச்செல்லும் வழியிலே யெதிர்ப்பட்ட கடுமையானதோர் பாலைவனத்திற்புக்க செய்தியைக் கூறுங்கால் கச்சியப்பசிவா சாரிய சுவாமிகள் மிக அருமையாக அதன் மாண்பினையுமதன் கண் முருகவேள் சென்றபான்மையையுங் குறித்திருப்பனபற்றி இனிவரையலுற்றும்.

தொகுதியான அழகிய கிரணங்களையுடைய சூரியனுஞ் சந்திரனுமப் பாலைவனத்தைச் சூழ்ந்து போவதேயன்றி யதற்கு நேராக மேலே (வானத்திற்) போகத்திறமிலர், மற்றைத்தேவர் களும் மற்றுமுள்ளவர்களும் அத்தன்மையரே யாவர்; மேகமுங் காற்றுமெந்நாளும் அக்கடுஞ்சுரத்தின் பக்கத்திற் செல்லுதற் கும் இணங்கா என்ற பொருளமைய,

"கற்றையங் கதிர்ப்பரிதியு மதியுமக் கானஞ்
சுற்றி யேகுவதல்லது மிசைபுகார் சுரரு
மற்றுளார்களு மனையரே; யெழிலியு மருத்து
மெற்றை வைகலுமதன் புடைபோகவு மிசையா"

என்ற கவியைக் கந்தபுராண ஆசிரியர் நவின்றுள்ளார். இங் ஙனங் கூறவே மேலேயும் பக்கத்திலும் யாவருந் துன்பமின்றிச் செல்லலாகாதபடி நெடுந்தூரமளவும் வெப்பத்தை வீசிக் கொதிக்குமியல்பைக் கொண்டது அப்பாலைவனம் என்பது பெறப்படும். எத்துணைச் சேய்மையிலுள்ளாரையும் தபிக்கும் இயல்பினனுன வெய்ய கிரணங்களையுடைய இரவியும் இதன் வெப்பத்துக்கு ஆற்றுன் எனவே, பிறராற்றுமை தானே தெளி

யப்படும். அந்நிலத்தில் மழையும் காற்றும் எந்நாளும் இல்லாமைக்குக் காரணம் அவையங்குச்செல்ல அஞ்சுதலேயாம் என்ற தெளிவான கருத்துக்கள் இக்கவியில் விளங்குதல் காண்க.

இனி யிவ்விடயமாய்க் கம்பர் குறித்துள்ளவற்றைக் காண்போம்

"பாருமோ டாதுநீ டாதெனும் பாலதே
சூருமோ டாதுகூ டாதரோ சூரியன்
தேருமோ டாதுமா மாகமீ தேரினேர்
காருமோ டாதுநீள் காலுமோ டாதரோ"

என்பது, சொல்லாசிரியரும் வில்லாசிரியருமாகிய கௌசிகரைப் பின்றொடர்ந்து செல்லுங்கால் இராமலக்குமணர் சிவபிரான் யோகுசெய்த இடமான காமனாச்சிரமத்தையடுத்து அங்கு ஓர் நாள் முனிவர்களுடனே தங்கியிருந்து மறுநாள் பாலைவனமொன்றை யண்மினர்கள் என்ற சந்தர்ப்பத்து வருகின்ற பாசுரமாகும்.

"பூதேவதையும் அந்நிலத்தைவிட்டு ஓடிப்போக முயலுமேயாயினும் ஓடிப்போக மாட்டாது; ஏனெனில் இடத்தைவிட்டு அப்புறப்படாதது என்னுந் தன்மையையுடையதாதலால்; அந்நிலத்துக்குரிய காளியாகியதெய்வமும் அந்நிலத்தைவிட்டு ஓடிப்போக முயலுமேயாயினும் ஓடிப்போகமாட்டாது; ஏனெனில் நிலத்தெய்வம்நிலத்தைவிட்டகலமுடியாதன்றே? அந்நிலத்துக்கு நேராகப் பெரியஆகாயத்திலே சூரியனது ரதமும் அந்நிலவெப்பத்தாற் குதிரைகள் சோர்வடைதலால் விரைந்து செல்லமாட்டாது; வெப்பந் தணித்தற்குரிய குளிர்ந்த மழையுங் காற்றும் அங்கில்லையோவெனின்; ஆலோசிக்குமிடத்து அந்நிலத்துக்கு நேராக மேகமும் நிலவெப்புக்கஞ்சி வானத்திற் செல்லாது; வீசுகின்ற காற்றும் அங்ஙனமே செல்லாது" என்பது இக்கவியின்பொருள்.

இனி, இக்கவியின் முதலிரண்டடிகட்குப் பூதேவதையும் (அப்பாலைவன வெப்பத்தால்) ஓடாமல் நிலைத்திருக்கமுடியாது; நிலத் தெய்வமாகிய காளியும் (அப்பாலைவன வெப்பத்தால்) ஓடாமலிருக்க இயலாது என்றும் பொருளுரைக்கலாம்.

மற்றும், 'பாரும் ஓடாது நீடாதெனும் பாலதே' என்னும் இக்கவியின் முதலடியில் 'பாரும்' என்பதை ஆகு பெயராகக் கொண்டு பாலை நிலத்துப் பொருள்தவிர, மற்றை நிலத்துப் பொருள்கள் யாவும் அவ்விடத்திற்குச் செல்லா; ஏனெனின்

வேற்று நிலப்பொருள்கள் ஆங்குச் செல்லின் விருத்தியாகாது என்னுந்தன்மை யுண்டாயிருத்தலால்; என்று முதலடிக்குப் பொருள் காணலுமுண்டு. முற்குறித்த கந்தபுராணக் கவியும் இக்கவியும் பெரும்பாலும் தம்மிற்கருத்தொத்திருத்தல், ஈண்டுக் காண்டற்பாலது.

மூங்கில் இனங்களாற் சொரியப்பட்ட முத்துக்களும், (முட்போல) உயர்ந்து மேலெழுந்த செந்நிறமான பருக்கைக் கற்களும், அளவிறந்த பாம்புகள் கக்கிய மாணிக்கங்களும் அப் பாலைவனத்திலே நெருங்கியிருக்குங் காட்சியானது, அழிதலில் லாத அவ்வனத்தின் தீச்சுடுதலினால் தனதுடம்பு வெடித்து வருந்துகிற பூமிதேவி உடம்பிற் கொப்புளங்கொண்ட தன்மை யைப்போலும் என்ற கருத்தமையக் கச்சியப்பர்,

‘மூளையினஞ் சொரிமுத்தமும் முந்துசெம்பரலும்
அளவில் பாந்தளின் மணிகளு மீண்டியே யமர்தல்
விளிவிலவ்வனத் தீச்சுடத் தனதுமெய் வெடித்தே
யுளையுமண்மகள் மொக்குளுற்றிடு திறனொக்கும்’

என்று தமது புராணத்திற் கூறியுள்ளார்.

இக்கருத்துக்கள் பெரும்பாலும் அமையக் கம்பர் தமது இராமகாதையில், மூங்கில்கள் சொரிந்த முத்துக்களும், பாம்பு கள் உமிழ்ந்த மாணிக்கங்களும், பருக்கைக் கற்களும், தரை வெடித்தலும், எரிதலும், பாலைவனத்திலுண்டென்பதை,

‘தழையிலா, வேய்பிளந்துக்க வெண்டரளமும் விடவரா
வாய்பிளந்துக்க செம்மணியுமே வனமெலாம்’

‘பொரிபரற் படர்நிலம் பொடிந்து கீழுற
விரிதலிற் பெருவழி விளங்கித் தோன்றலால்
எரிந்தெழு கொடுஞ்சுரம்’

என்ற தொடர்களால் விளங்க உரைத்திருப்பன கண்டுகொள்க.

இராமபிரானும், முருகமூர்த்தியும் நிரலே பாலைவனத்தின் கண் நடந்து சென்றபோது அஃதவர்க்கெங்ஙனமாயது என்ற பான்மையைக் கவிஞரிவரும் வருணித்த மாண்பையினிப் பொருந்தவரைவாம்.

மிகக்கொடிய சுரத்தைக் கௌசிகனுடன் இராமலக்குமண ரிருவரும் அடைந்தகாலை, அம்முனிவன், இவ்விருவரும் அள விறந்த சிறந்த ஆற்றலையுடையவராயினும், மலரினும் மிக மெல்லிய இயற்கையுடையராதலால், நிலவெப்பத்தாலும் வழிநடை

யாவுஞ் சிறிது வருத்தமுறுவவரேயென்று தன் மனத்திற்கருதிப் பின் அம்மக்களது முகங்களைக் குறிப்பாகப் பார்த்தான். அங்ஙனம் நோக்கவே, குறிப்பறியுந்தன்மையையுடைய அவ் வரசகுமாரர்களும் விசுவாமித்திரனது திருவடிகளைச்சேர, அவ் வளவிலே அம்முனிவன் பிரமனாலுண்டாக்கப்பட்ட (பலை, அதிபலை) என்னுமிரண்டு வித்தைகளையும் அப்பொழுது தெரியுமாறவர்கட்குப் புகட்டினான். அவ்விரண்டு மந்திரங்களை யும் அவ்விருவரும் தம்தம் மனத்திலே சிந்தித்துக்கொண்டார் கள். அவ்வளவிலே யுகாந்தகாலத்துத் தீயையும் இகழ்கின்ற மிக்கதீ எரியப்பெற்ற கொடிய அப்பாலைவனத்திலே (தாங்கள்) செல்லுதல், தெளிவான குளிர்ந்த நீரிலே செல்லுதலையொத் துக் குளிர்ந்ததாயிருந்தது என்ற கருத்துங்கள் பொருந்தக் கம்பநாடர் பாலகாண்டத்திற் றாடகைவதைப் படலத்தின்கண்,

“எரிந்தெழு கொடுஞ் சுரமினைய தெய்தலும்
அருந்தவ னிவர்பெரி தளவி லாற்றலைப்
பொருந்தின ராயினும் பூவின் மெல்லியர்
வருந்துவர் சிறிதென மனத்தி னெக்கினான்”

“நோக்கின னவர்முக நோக்க நோக்குடைக்
கோக்குமா ருமடி குறுக நான்முக
னாக்கிய விஞ்சைக ளிரண்டு மவ்வழி
யூக்கின னவையவர் உள்ளத் துன்னினார்”

“உள்ளிய காலையி னூழித் தீயையு
மெள்ளுறு கொழுங் கனலெரியும் வெஞ்சுரந்
தெள்ளுதண் புனலிடைச் சேற லொத்தது
வள்ளலு முனிவனை வணங்கிக் கூறுவான்”

என்று மூன்று பாசுரங்களைக் கவினுற நவின்றுள்ளார்.

இனி, கந்தபுராணவாசிரியர், நலனுற உரைத்துள விடயங் களைத் தெளிய வரைவாம்.

பிரபஞ்சவாசையிலுழலுங்கால், கரணங்களைப் பசுகரணங் களென்றும், அவ்வாசை சிவபிரான் திருவருளால் ஒழிய அக் கரணங்கள் தம் செயலற்றுச் சிவமயமாய் நின்றபோது அவற் றைச் சிவகரணமென்றுங் கூறுதல் மரபு. ஐம்புலவாசையி னின்றுநீங்காமல் அலைகிற அருமையாகிய உயிரினது மனமொழி மெய்யாகிய திரிகரணமும் முதற்பெருங் கடவுளாகிய சிவபெரு மானது திருவருளினால் அவனுக்கே யுரியதாகிவிட்ட தன்மை போலச் சிறிதும் நீர்வளமின்றித் தீமயமாகிய கொடிய வப்பாலை

ஒட்டக்கூத்தர் காலத்திய அரசியல் தலைவர்கள்

வை. சுந்தரேச வாண்டையார், ஆசிரியர், திருவையாறு

சோழமண்டலத்தில் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த புலவர் பெருமக்களுள் ஒட்டக்கூத்தர் என்பவர் தலைசிறந்தவராவர். இவரைக் காளக்கவி என்று மகாமகோபாத்தியாய. டாக்டர். திரு. ஐயர் அவர்கள் தக்கயாகப் பரணியில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இவரது செந்தமிழ்ப் புலமையும் சிவபத்தியின் மாண்பும் பெரிதும் போற்றற்குரியன. இவர், விக்கிரமசோழன், இரண்டாங் குலோத்துங்க சோழன், இரண்டாம் இராசராசசோழன் ஆகிய மூன்று மன்னர்களாலும் பெரிதும் பாராட்டப்பெற்றுக் கவிச் சக்கரவர்த்தி என்ற பட்டமும் எய்தி, மிக உயரிய நிலையில் வீற்றிருந்தார். இவர் மேற்குறித்த மூன்று மன்னர்களின் மீதும் தாம் கொண்டுள்ள அன்பிற்கு அடையாளமாக மூன்று உலாக்கள் பாடியுள்ளனர். இவைகள் " மூவர் உலா " எனப் பெயர்பெறும். இவைகளன்றி விக்கிரம சோழன்மீது பரணி ஒன்றும் இரண்டாங் குலோத்துங்க சோழன்மீது பிள்ளைத் தமிழ் ஒன்றும் இவர் பாடியுள்ளனர். இவற்றுள் விக்கிரம சோழன்மீது இயற்றப்பெற்ற பரணி* இதுபொழுது கிடைத்திலது.

இந்நூற்களாலும், மேற்குறித்த உலாக்கொண்ட மூன்று சோழமன்னர் காலங்களில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டுக்களாலும், அரசியல் தலைவர்களில் சிலரைப்பற்றிய வரலாறுகள் அறியக் கிடக்கின்றன. இத்தலைவர்கள் புலவர்கள் பாடும் புகழுடையவர்களாய் இருந்தனர். இவர்களைப்பற்றி ஈண்டுச் சுருக்கமாய் எழுதப்படுகின்றன.

---

* இச்செய்தி ஐயர் அவர்களால் வெளிப்போந்த தக்கயாகப் பரணியால் விளங்குகின்றது.

*மணவில் கூத்தன் :—

இவன் தொண்டை மண்டலத்திலுள்ள இருபத்துநான்கு கோட்டங்களுள் ஒன்றாகிய மணவிற் கோட்டத்து மணவில் என்ற ஊரைத் தனக்குப் பிறப்பிடமாகக் கொண்டவன். இவன் விக்கிரம சோழனது படைத் தலைவனாய் அமர்ந்து பெரும்புகழ் எய்தியிருந்தான். இச்செய்தி விக்கிரமசோழன் உலாவால் (கண்ணிகள் 78, 79) அறியக் கிடக்கின்றது. இவன் தொண்டையர்கோன், நரலோகவீரன், கலிங்கர் ஏறு, காலிங்கர்கோன், அரம்பையர்கோன், எனப்பலவாறு பாராட்டப்படுகின்றான்.

அரும்பாக்கம் என்ற ஊரே மரூஉ மொழியாக அரம்பை என்று வழங்கப்பெறும். அரம்பையர்கோன் (அரும்பாக்கத்துக்குத் தலைவன்) என்று இவன் குறிக்கப் பெற்றிருப்பதால், கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரால் ஆக்கப்பெற்ற அரும்பைத் தொள்ளாயிரம் என்ற நூல் இவன்மீது பாடப்பெற்றிருத்தல்வேண்டும். இந்நூல் இதுபொழுது கிடைத்திலது.

இவன் சைவத்திற்குச் செய்த தொண்டுகள் சைவ நன்மக்களால் பெரிதும் போற்றற் குரியன.

தில்லையில் செய்த தொண்டு :—

இவன் தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன்னும், பேரம்பலத்திற்குச் செம்பும் வேய்ந்துள்ளான். அங்கு நூற்றுக்கால் மண்டபம், ஞானசம்பந்தர் தேவாரம் ஓதுதற்குரிய மண்டபம், பெரிய திருச்சுற்று மாளிகை, சிவகாம கோட்டத்திற்குத் திருச்சுற்று, இவைகளை எடுப்பித்தான். மாசி மக நாளில் சிவபெருமான் கடலாட எழுந்தருளுதற்கு ஒரு பெருவழியை ஏற்படுத்தினான். இறைவன் கடற்கரையில் வீற்றிருக்க ஒரு மண்டபத்தையும் அமைத்தான். சிவபெருமானுக்கு, தியாகவல்லி முதலான ஊர்களைத் தேவதான இறையிலியாக விடுத்துள்ளான். மூவர் அருளிய தேவாரப்பதிகங்கள் அனைத்தையும் செப்பேடுகளில் எழுதுவித்தான்.

---

* இவன் முதற்குலோத்துங்க சோழனது படைத்தலைவனாய் அமர்ந்து, ஆற்றிய செயல்களை, உயர்திரு. பண்டாரத்தார் அவர்களால் ஆக்கப்பெற்ற 'முதற்குலோத்துங்கன்' என்ற சுவடியில் விரிவாகக் காணலாம்.

திருவதிகையில் செய்த தொண்டு:—

திருவதிகை வீரட்டானேச்சுரர் கோயிலில் காமகோட்டம், வேள்விச்சாலை முதலானவைகளை எடுப்பித்துள்ளான். சிவபெருமானுக்குப் பல நிபந்தங்களையும் அளித்துள்ளான்.

இச்செய்திகள் அனைத்தும் இவனால் தில்லைச் சிவபெருமான் கோயிலிலும், திருவதிகை வீரட்டானேச்சுரர் கோயிலிலும் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றன. இவைகளுள் தில்லையில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்களில் கண்ட வெண்பாக்களில் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுகின்றேன். இவைகளின் சொற்சுவை, பொருட்சுவை, காப்புரைகள் கற்போர் உள்ளத்தை உருக்குவனவாயுள்ளன.

[இவ் வெண்பாக்கள் தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதி நான்கு, பக்கம் முப்பத்துமூன்றிலிருந்து எடுக்கப்பட்டன]

எல்லை கடலால் இகல்வேந்த ரைக்கவர்ந்த
செல்வமெலாம் தில்லைச்சிற் றம்பலத்துத்—தொல்லைத்
திருக்கொடுங்கை பொன்வேய்ந்தான் திண்மைக் கலியின்
தருக்கொடுங்க வெல்கூத்தன் தான்.

தில்லையிற்பொன் னம்பலத்தைச் செம்பொனால் வேய்ந்து
னெல்லையைப்பொன் னாக்கினா னென்பரால்—ஒல்லை [வா
வடவேந்தர் செல்வமெலாம் வாங்கவேல் வாங்கும்
கொடைவேந்தன் தொண்டையார் கோன்.

தென்வேந்தன் கூன்நிமிர்த்த செந்தமிழர் தென்கோயில்
பொன்வேய்ந்து திக்கைப் புகழ்வேய்ந்தான்—என்னோர்க்
குற்றம் பலகண்டோன் கோவிழைக்கு வெல்கூத்தன் [கும்
சிற்றம் பலத்திலே சென்று.

பொன்னம் பலக்கூத்த ராடு மிடம்மண்வில்
பொன்னம் பலக்கூத்தன் பொன்வேய்ந்தான்—தென்னர்
மலைமன்னர் ஏனை வடமன்னர் மற்றைக்
குலமன்னர் செல்வமெலாம் கொண்டு.

ஏனை வடவரசர் இட்டிடைந்த செம்பொனால்
†எனலென தில்லை நாயகற்கு—ஆனை
சொரிகலமா மாமயிலைத் தொண்டையர்கோன் கூத்தன்
பரிகலமாச் செய்தமைத்தான் பார்த்து.

† (என் + அல் + என) எனப் பிரித்து இருட்டு எற்றுக்கு இருக்கிறதென்று அதனை நீக்க, என்று பொருள் கொள்ளலாம்.

இட்டான் எழில்தில்லை எம்மாற் கிசைவிளங்க
மட்டார் பொழின்மணவில் வாழ்கூத்தன்—ஒட்டாரை
இன்ப மறநினைத்தா னேற்றினல் நீண்டொளிசேர்
†செம்பொற் றனிக்காளஞ் செய்து.

ஆடுந் தனிக்தேனுக் கம்பலத்தே கற்பூரம்
நீடுந் திருவிளக்கு நீடமைத்தான்—கூடா
ரடிக்குத் தினைநரியும் புள்ளும் அருந்தித்
தடிக்கப் பொருங்கூத்தன் தான்.

பொன்னம் பலஞ்சூழப் பொன்னின் திருவிளக்கால்
மன்னு திருச்சுற்று வந்தமைத்தான்--தென்னவர்தம்
பூவேறு வார்குழலா ரோடும் பொருள் பெறுவான்
மாவேறு தொண்டையார் மன்.

ஆடுந் தெளிதேனை ஆயிர நாழிநெய்யால்
ஆடும் படிகண்டான் அன்றினர்கள்—ஓடுந்
திறங்கண்ட நாளன் சினக்களிற்றன் ஞாலம்
அறங்கண்ட தொண்டையர்கோன் ஆங்கு.

நட்டப் பெருமானார் ஞானக் குழைந்தளித்த
சிட்டப் பெருமான் திருப்பதியம்—முட்டாமைக்
கேட்போர்க்கு மண்டபத்தைச் செய்தான்தெவ் வேந்தர்
வாட்போர்கொள் தொண்டையர்கோன் மன். [கெட

மல்லக் குலவரையால் நூற்றுக்கால் மண்டபத்தே
தில்லைப் பிரானுக்குச் செய்தமைத்தான்—கொல்ல
மழிவுகண்டான் சேரன் அளப்பரிய ஆற்றற்
கிழிவுகண்டான் தொண்டையர்கோ னேறு.

தில்லைப் பெரிய திருச்சுற்று மாளிகை
எல்லைக் குறைவரைபோ லீண்டமைத்தான்—தொல்லைநீர்
மண்மகளைத் தஙகோன் மதிக்குடைக்கீழ் வீற்றிருத்தி
உண்மகிழும் தொண்டையர்கோ னுற்று.

புட்கரணி கல்சாத்து வித்தான்பொற் கோயில்வாய்
விக்கரணம் பார்படத்தன் மேல்விதித்துத்— திக்களவும்
மாநடத்திக் கோல்நடத்தும் வாட்கூத்தன் மண்ணிலறம்
தானடத்தி நீடுவித்தான் தான்.

---

† இவ்வீற்றடி மெல்லின வெதுகை.

வீதிசூழ் நல்விளக்கும் வீற்றிருக்க மண்டபமும்
மாதுசூழ் பாகம் மகிழ்ந்தோர்க்குப்—போதுசூழ்
தில்லைக்கே செய்தான் திசைக்களிறு போய்நிற்கும்
எல்லைக்கே செல்கலிங்க ரேறு.

நடங்கவின்கொ ளம்பலத்து நாயகச் செங் தேனின்
இடங்கவின்கொள் பச்சைஇளந் தேனுக்—கடங்கார்
பருமா ளிகைமேற் பகடுதைத்த கூத்தன்
திருமா ளிகையமைத்தான் சென்று.

எவ்வுலகும் எவ்வுயிரு மீன்று மெழிலழியாச்
செவ்வியாள் கோயில் திருச்சுற்றைப்—பவ்வஞ்சூழ்
எல்லைவட்டம் தங்கோற் கியல்விட்ட வாட்கூத்தன்
தில்லைவட்டத் தேயமைத்தான் சென்று.

வாளுடைய பொற்பொதுவின் மன்னி நடங்காணும்
ஆளுடைய பாவைக் கபிடேகம்—வேளுடைய
பொற்பினான் பொன்னம் பலக்கூத்தன் பொங்குகட
வெற்பினான் சாத்தினான் வேறு.

சேதாம்பல் வாய்மயிற் குத்தில்லைத் தேவிக்குப்
பீதாம் பரஞ்சமைத்தான் பேரொலிநீர்—மோதா
வலைகின்ற வெல்லை யபயனுக்கே யாக
மலைகின்ற தொண்டையார் மன்.

செவ்வி திருந்தறங்க ளெண்ணான்குந் தில்லைக்கே
நல்லமகப் பாலெண்ணெய் நாள்தோறும்—செல்லத்தான்
கண்டா னரும்பையர்கோன் கண்ணகன்நீர் ஞாலமெல்லாங்
கொண்டான்நம் தொண்டையர் கோன்.

ஆதிசெம்பொன் னம்பலத்தி லம்மா னெழுந்தருளும்
வீதியும்பொன் வேய்ந்தனனால் மேல்விளக்கும்—சோதிக்
கொடியமைத்தான் பொன்னால் குறுகவலான்* ஒன்றும்
படியமைத்தான் தொண்டையர்கோன் பார்த்து.

நாயகர் வீதி எழுந்தருளும் நன்னாளால்
தூய அகருவெழு தூபத்தால்—போயொளிசேர்
வான்மறைக்கக் கண்டானிம் மண்மகளை வண்புகழால்
தான்மறைத்த கூத்தன் சமைத்து.

---

* வந்து எழுந்தருளுதற்கு வல்லவனாகிய இறைவன் வருதற்குப் பொருந்தும் படிக்கட்டு என்பது இதன் பொருள்.

என்றும் பெறுதலால் ஏறு விழாப்புலியூர்
மன்றி னடனுக்கு மாமதக்—குன்று
கொடுத்தான் இம்மண்ணிற் கொடுங்கலிவா ராமே
தடுத்தான்நம் தொண்டையர்கோன் றான்.

முத்திறத்தா ரீசன் முதற்றிறத்தைப் பாடியவர்
ஒத்தமைத்த செப்பேட்டி னுள்ளெழுதி—இத்தலத்தின்
எல்லைக் கிரிவா யிசையெழுதி னன்கூத்தன்
தில்லைச்சிற் றம்பலத்தே சென்று.

தில்லை வளரும் தெளிதே னொளிதழைப்ப
நல்லதிரு நந்தா வனஞ்சமைத்தான்—வில்லதிரக்
கோட்டங்கொள் வாள்வேந்தர் கொற்றக் களியானை
யீட்டங்கொள் காலிங்க ரேறு.

மாசிக் கடலாடி வீற்றிருக்க மண்டபமும்
மாசற்ற வற்றைப் பெருவழியும்—ஈசற்குத்
தென்புலியூர்க் கேயமைத்தான் கூத்தன் திசையனைத்தும்
மன்புலியா னைநடக்க வைத்து.

இது வெட்டுவித்தான் காலிங்கராயர் ஆண்ட அரசு. அறம் மறவற்க அறமல்லது துணையில்லை.

திருச்சிற்றம்பலம்.

(தொடரும்)

ஜைன சமயத்தவரால் செய்யப்பட்ட
யசோதர காவியம்—புத்துரை

திரு. வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள்
காஞ்சீபுரம்

(முற்றொடர்ச்சி துணர் 13, மலர் 6, பக்கம் 222)

அரசன் தேவியின் கோயிலை அடைதல்

18. சண்ட [1]கோபித காவலி தத்துவங்
கொண்ட கேள்வியுங் கூரறி வும்மிலாத்
தொண்டர் கொண்டு தொழுந்துருத் தேவதை
சண்ட மாரி தனதிட மெய்தினன்.

முன்பாடம் :—[1]கோபி தகவில்.

பொருள் :—தகா சண்டகோபி, என மொழி மாற்றுக.

பொழிப்புரை :—விரும்பப்படும் தகுதியல்லாத மிக்க கோபத்தினை உடையவளும், உயிருக்கு இன்பம் பயத்தற்கு ஏதுவான வன்மையினை உடைய நல்ல தத்துவங்களைக் கொண்ட கல்வியும், நுண்ணிய அறிவும் இல்லாத தொண்டர்களால், தெய்வம் எனக்கொண்டு தொழப்படும் கொடிய தேவதையும் ஆகிய, சண்டமாரி என்னும் தேவியின் கோயிலை அடைந்தான், மாரிதத்தனாகிய அரசன்.

குறிப்புரை:—சண்டகோபி—மிக்க கோபத்தை உடையவள். தகா—தகுதியல்லாத. தொண்டர்—அடியார். துரு—வட சொல் திரிபு. துருதேவதை—கொடிய தேவதை. எய்தினன்—அடைந்தான்.

(ஓச)

அரசன் கோவிலை வலம்வந்து தேவியை வணங்கல்.

19. பாவ மூர்த்தி படிவ மிகுந்தவத்
தேவி மாட மடைந்து செறிகழன்
மாவ [1]லான்வலங் கொண்டு வணங்கினன்
தேவி யெம்மிடர் சிந்துக வென்றரோ.

முன்பாடம் :—[1]லோன்வலங்.

பொருள் :—செறிகழல் மாவலான் பாவ மூர்த்தி அத்தேவி படிவம் இருந்த மாடம் அடைந்து வலங்கொண்டு தேவி எம் இடர் சிந்துக என்று வணங்கினன் அரோ.

பொழிப்புரை :—காலில் செறிந்த கழலை உடையவனும், சிறந்த வெற்றியை உடையவனும் ஆகிய, மாரிதத்தன் என்ற அரசன், பாவ வடிவினள் ஆகிய அச்சண்டமாரி தேவியின், உருவம் இருந்த கோவிலைச் சேர்ந்து, அக்கோயிலை வலமாகச் சுற்றி வந்து, அத்தேவியின் எதிர்நின்று, தேவி! எங்களுடைய துன்பங்களை அழித்தல்வேண்டும் என்று வணங்கினான்.

குறிப்புரை :—கழல்—வீரர்களும், அரசர்களும், காலில் அணியும் ஒருவகை அணி. மா—சிறந்த. வலான்—வெற்றியை உடையவன். அடைந்து—சேர்ந்து. சிந்துக—அழித்தல் வேண்டும். அரோ—அசை. (௧௯)

அரசன் பலிசெய்தற்கு நிற்கும் விலங்குகளைக் காணல்.

20. மன்ன னாணையின் மாமயில் வாரணந்
துன்னு சூகர மாடெரு மைத்தொகை
யின்ன சாதிவி லங்கிலி ரட்டைகள்
பின்னி வந்துபி றங்கின கண்டனன்.

பொழிப்புரை :—மாரிதத்தனாகிய மன்னன், தன் ஆணையின் படி அந்நகர மக்கள், சண்டமாரி தேவிக்குப் பலிசெய்யும் பொருட்டுக் கொண்டு வந்த கரிய மயில்களும், கோழிகளும், நெருங்கிச்செல்லும் பன்றிகளும், யாடுகளும், எருமைகளும், ஆகிய இவைகள், கூட்டம் கூட்டமாக நிற்றலையும், இச்சாதி விலங்குகளில் இரண்டு இரண்டாகக் கட்டப்பட்டுவந்து நிறைந்து நிற்கும் கூட்டங்களையும் கண்டான்.

குறிப்புரை :—வாரணம்—கோழி. சூகரம்—பன்றி. தொகை—கூட்டம். விலங்கு—மிருகம், பறவைகள் முதலியன, இரட்டை—இரண்டு.

சிறப்புரை :—விலங்கு—மக்களும், மரவகைகளும் ஊர் வனவும் அல்லாத ஏனைய உயிர் உள்ள பொருள்களைத் திரியக் அல்லது விலங்குகதி பிறப்பு எனல், ஜைன ஆசிரியர்தம் வழக்கு. தொகை என்றது—விலங்குகளில், இரண்டின் மிக்கு, நான்கு, ஆறு, எட்டு, பத்துமுதலிய பலவாகக் கொணர்ந்தவற்றை. இரட்டைகள் என்றது—இரண்டு இரண்டாகக் கட்டப்பட்டு

வந்த வற்றை. சிலர், நாலு, ஆறு, எட்டு, பத்துமுதலாகப் பல உயிர்களைப் பலி செய்கிறேன் எனவும், சிலர், ஒன்று, இரண்டு விலங்குகளைப் பலிசெய்கிறேன் எனவும், தங்கள் தேவதைகளிடத்தே விண்ணப்பம் செய்து கொள்ளுதல் வழக்கு. அவ்வழக்குப்படிக் கொண்டுவந்தவற்றைத் தொகையாகவும், இரட்டைகள் ஆகவும் கண்டனன் என்றபடி. (௰௬)

அரசன் மக்களைப் பலி செய்குவன் எனல்

21. யானிவ் வாளினின் மக்க ளிரட்டையை
யீன மில்பலி யாக [1] வியற்றுவல்
ஏனை மானுயர் தாமிவ் விலங்கினி
லான பூசனை யாற்று தலாற்றென

முன்பாடம் :—[1] வியற்றினல்.

பொழிப்புரை :—அவ்விலங்கு கூட்டங்களைக் கண்ட மாரிதத்தனாகிய அரசன், யான், பின்னை இவ்வாளினால் குற்றம் அற்ற மக்கள் இருவரைப் பலியாகச் செய்குவன். பிறமக்கள், இவ்விலங்குகளைத் தேவிக்குப் பொருந்திய பலியாகச் செய்தலைச் செய்யட்டும் எனக்கூறினான்.

குறிப்புரை :—மக்கள் இரட்டை—மக்கள் இருவரை. மானுயர்—மக்கள் ; மனுஷியர் என்ற வடமொழித்திரிபு. தாம்—அசை. இல், இல்—உருபுமயக்கங்கள் ஆனபூசனை—பொருந்தியபலி. ஆற்றென—ஆற்றுக என விகாரம். (௰௭)

அரசன் மக்கள் இருவரைக் கொண்டுவரும்படிக் கொலைஞனுக்குக் கூறல்.

22. வாட [1] லொன்றில மக்களி, ரட்டையை
யீடி லாத வியல்பினி லிவ்வழி
யேட சண்ட கருமதந் தீகென
நாட வோடின னன்னகர் தன்னுளே.

முன்பாடம் :—[1] லொன்றிலன் மக்க.

பொருள் :—ஏட சண்ட கரும வாடல் ஒன்று இல ஈடு இலாத இயல்பினில் மக்கள் இரட்டையை இவ்வழி தந்தீக என நல்நகர் தன் உளே நாட ஓடினன்.

பொழிப்புரை :—மாரிதத்தனாகிய அரசன், சண்டகருமன் என்ற கொலைஞனை விளித்து, எட! சண்ட கரும! நீ சென்று உடலில் குற்றம் சிறிதும் இல்லாதவரும், அழகில் ஒப்புஇல்லாதவரும் ஆகிய மக்கள் இருவரை இவ்விடத்தே கொண்டு வருவாயாக எனக் கூறினான். அச்சண்டகருமன், அவ்விராசபுரத்தின் உள்ளே தேடச் சென்றான்.

குறிப்புரை :—வாடல்—உடல்குறை, பிணி முதலியகுற்றம், ஒன்றுஇல—சிறிதும் இல்லாத. இயல்பினில்—அழகினில். இவ்வழி—இவ்விடம். தந்தீகென—தருவாயாக; கொடுப்பாயாக; கொண்டு வருவாயாக.

சிறப்புரை :—"தந்தீக"-வினைத் திரிசொல். (சீவக சிந்.2796.) "வந்தீக" (சிலப்பதி-வரந்தரு-162-163) "உணர்ந்தீக" (சூளாமணி-சீயவ-69) இவைகளின் உரைகளைப் பார்க்க. (மெஅ)

சுதத்த முனிவர் இராச புரத்தில் தங்குதல்.

23. ஆயிடைச் சுதத்தனைஞ்ஞூற் றுவரருந் தவர்களோடுந்
தூயமா தவத்தின் மிக்க வுபாசகர் தொகையுஞ் சூழச்
சேயிடைச் சென்றோர் தீர்த்த வந்தனை செய்யச்செல்வோன்
மாயமில் குணக்குன் [1]றென்னு மாதவர்க் கிறைவன்வந்தான்

முன்பாடம் : [1]றன்ன.

பொருள் :—மாயமில் குணக்குன்று என்னும், மாதவர்க்கு இறைவன் சுதத்தன் அருந்தவர் ஐஞ்ஞூற்றுவர்களோடும் தூயமா தவத்தின் மிக்க உபாசகர் தொகையுஞ்சூழச் சேயிடைச் சென்று ஓர் தீர்த்தம் வந்தனை செய்யச் செல்வோன் ஆயிடை வந்தான்.

பொழிப்புரை :—காமம், வெகுளி, மயக்கம் முதலிய குற்றங்கள் இன்மையால் குணக்குன்று என்று புகழப் படுபவரும், பெருமைபொருந்திய ஸ்ரீஜின தரும நெறியில் துறந்து சிறந்தவராகிய முனிவர்கட்குத் தலைவரும் ஆகிய, சுதத்த முனிவர் என்னும் பெயரை உடைய ஒருவர், ஒழுகுதற்கு அரிய துறவறத்தினை மேற்கொண்ட ஜைன முனிவர்கள் ஐந்நூற்றுவரும், நல்ல பெருமை பொருந்திய சிராவக நிலைமையால் சிறப்புற்ற உபாசகர்கள் கூட்டமும் தம்மைத் தொடர்ந்து சூழ்ந்துவர, தொலைவில் சென்று ஒரு அருகபரமேட்டியை வந்தனை செய்யச் செல்லுவோர், அவ்விராசபுரத்தில் வந்தார்.

குறிப்புரை :—மாயம்-குற்றம். உபாசகர்-ஜைன சமயத்து இல்வாழ்வார்; சிராவகர். தொகை—கூட்டம். தீர்த்தம்-அருகர்; ஆகுபெயர். வந்தனை-வணக்கம். ஆயிடை—அந்த இடம்; இராசபுரம்.

சிறப்புரை :— "மாயமில்" — "மாயமில் தவத்தினன்" (மேருமந்-811) "குணக்குன்று" என்பது குணக்கடல் என்பது போன்ற உருவகப்பெயர். அது, பிறரால் எத்தகைய துன்பஞ் செய்யப்படினும், மலைபோலும் சலியாத மனத்தைஉடையவர் என்ற பொருள்தரும். "விலங்கல் போலும் கற்பினுள்" (மேரு மந்-844.) அதனைக், "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயுங் காத்தலரிது." (திருக்கு—29.) என்ற திருமொழியால் அறிக. அத்திருமொழியின் பொருள், "குணமாகிய குன்றின்மீது நின்றவர்கள், கணம் என்னும் சிறிய கால அளவும், கோபத்தினைத்தம் மனத்தில் கொள்ளார்" என்பது. இவ்வகை அன்றி, வேறுவகையால் கூறப்படும் பொருள்கள் கூறுவார் கூற்றேயன்றிக், கவிக்கருத்தன்று. அன்றி, "இணர் எரி தோய்வன்ன இன்னா செயினும், புணரின் வெகுளாமை நன்று" (திருக்.—308) இத்திரு மொழியுள் "புணரின்" என்றதற்கு "வெகுளாமைக் கூடுமாயின்" எனப் பொருள் கூறல் பொருத்தம் அன்று; ஒருவன், தீயில் தோய்ந்தால் அன்ன துன்பத்துக்கு ஏதுவான செயலைச் செய்வான் ஆயின், அச்செயல், செய்யப்பட்டானைச் சாராதொழியினும் ஒழியும், சாரினும் சாரும், புணிரின்—அத்துன்பம் சார்ந்த விடத்தும் வெகுளாமை நன்று எனவே கவிக்கருத்தாகும். நன்று என்றது, உத்தமம் என்ற வடசொல்லின் நேர்மொழி. நன்று—பெரிதாகும் (உரிச்சொல்—) "வாய்ச்சிவா யுறுத்தி மாந்தர் மயிர் தோறுஞ் செத்தினுலும், பூச்சுறு சாந்தமேந்திப் புகழ்ந்தடி பணிந்த போதும், தூக்கியிவ் விரண்டு நோக்கித் தோல் வினை என்று தேறி, நாச் சேறும் பராவுங் கோள்ளார் நமர் பிற ரேன்று முள்ளார்" சீவக சிந்—2825) மற்றும் பொறுமைக்கு இலக்கியம், மேருமந்தரர் புராணம்—சஞ்சயந்தன் முத்திச் சருக்கத்தாலும், இந்நூலுள் இச்சுதத்தமுனிவர் பெருமையாலும் (5-வது சரு. 7-வது செய்.) அறிக. '. தீர்த்தர்—அருகர். "சிங்கவன் பேரணைத் தீர்த்தனை" (திருநூற் 10) "சேதிய முப்புவனத்திரு கூற்றமுந் தீர்த்தர் உள்ளிட்டு" (திருநூற் 93) "தேறினர் தொழுந் தீர்த்தனை" (திருக்க. 32) "செய்த பாவ மெல்லாந் தீர்த்திடுந் தீர்த்தன்" (சீவக சிந். 821) "தீவினை

கழூஉந் தீர்த்தன் " (சீவக சிந். 3133) தீர்த்தர் வந்தனை—அருக பரமேட்டிகள் பரி நிர்வாணம் அடைந்த இடங்கட்குச் சென்று அவ்விடத்துள்ள அவர்களின் உருவங்களை அல்லது பாதங்களை வணங்குதல் ஜைன சமயத்தவர் வழக்கு. தீர்த்த வந்தனை செய்தலை லோகமூடம் என்பர் ஜைனாசிரியர்கள். "வரை பாய்தல் தீப்புகுதல் "ஆறுடல்" இன்ன உரைப்பின் உலகமயக்கு" (அருங்கலச்செப்பு—30) "மாமாங்க மாடல் மணர் குவித்தல் கல்லிடுதல், தாமோங் குயர்வரைமேற் சாவீழ்தல்—காமங் கொண்டு, ஆடோடு எருமை யறுத்தல் இவையுலக, மூடமென வுணரற் பாற்று." (அறநெறிச்சாரம் 14) ஆதலால் "தீர்த்த வந்தனை என்றதற்கு நீராடல், நீர்வணக்கம் எனப் பொருள் கூறல் கவிக்கருத்து அன்று. சுதத்தர்—வடமொழிப் பெயர்; நன்கு ஈபவர் என்பது பொருள். "சுரந்த கார் முகில் போல சுதத்தனென்று இரந்தவர்க்கு இடர்தீர அளித்தவன்" (மேரு மந்—233). தமிழ்ச் சங்க காலத்திய நல்லிசைப் புலவர்களுள் ளும் "நற்றத்தன்—நற்றத்தனார்" என ஒரு நல்லிசைப்புலவருக் கும் பெயர் உண்டு. இச் "சுதத்தன்" என்ற பெயரும் அந் நற்றத்தன்" என்ற பெயரும் ஒரு பொருள் சுட்டுதலை அறிக. இச்சிறப்புப் பெயர்கள் போன்றதே "திருவள்ளுவன்—திரு வள்ளுவனார்" என்ற பெயர்களும் ஆம். (௨௩)

24. வந்துமா நகர்ப்புறத்தோர் வளமலர்ப் பொழிலுள் விட்டுச்
சிந்தையா னெறிக்கட்டீமை தீர்த்திடு நியம முற்றி
யந்திலா சனங்கொண் டண்ண லனசனத் தவம மர்ந்தான்
முந்துநா முரைத்த சுற்ற முழுவதி னோடு மாதோ.

பொருள்:—முந்து நாம் உரைத்த சுற்றம் முழுவதினோடும் அண்ணல் மாநகர் புறத்து வளமலர் ஓர் பொழிலுள் வந்து விட்டு சிந்தையால் நெறிக்கண் தீமை தீர்த்திடும் நியமம் முற்றி அந்தில் ஆசனம் கொண்டு அன் அசனம் தவம் அமர்ந் தான் மாதோ.

பொழிப்புரை:—முன்னே எம்மால் கூறப்பட்ட முனிகள், சிராவகர்கள் ஆகிய யாவரோடும், சுதத்த முனிவர், அழகால் சிறந்த இராச புரத்தின் பக்கத்தில், அழகிய மலர்களை உடைய ஒரு சோலையை அடைந்து தங்கி, நாள்தோறும் காலங்களில் செய்யும் நியமங்களைச் செய்து முடித்து, அச்சோலையுள் ஆசனம் அமைத்துக்கொண்டு, வீடு அடைதற்கு ஏதுவான வழியைத் தடுக்கும் தீமைகள் கெடுதற்கு உரிய உண்டி உட்கொள்ளாத தாகிய விரதத்தில் அமர்ந்தார்.

குறிப்புரை :—வந்து—அடைந்து. விட்டு—தங்கி. நியமம்—நாள்தோறும் காலங்களில் செய்யும் தியானம். அந்தில்—அவ்விடத்தில்; அச்சோலையுள். அன் அசனம் தவம்—உண்டி உட்கொள்ளாததாகிய விரதம். முந்தி—முன்னே. மாதோ—அசை.

சிறப்புரை :—அனசனத்தவம் — (அன் — இன்மைப் பொருள் உணர்த்தும் நகர மொழித்திரிபு. (வீரசோ-சந்தி-11) அசனம்—உண்டி. தவம்—விரதம்) "வினைகளுக்குதிர்ச்சி வேட்கை நீக்கிமெய் வசம் வரல், புனைவரும் பொறிச்சேறிப் புயிர்க் கழிவு போற்றுதல், நினைவின தொருக்கமும் நெறிவிளக்க முஞ் செயு, மனசனத்தவத்தினோடருந்தவன் பொருந்தினான்" (மேரு மந்.—423) (உ௫)

அபயருசியும் அபயமதியும் சுதத்தமுனிவரைக் காணல்.

25. [1]உளமதின் மலிந்த கொள்கையுபாசகர் குழுவினுள்ளார்
அளந்தறி வரிய கேள்வி யபயமுன் [2]ருசியுந் தங்கை
யிளம்பிறை யனைய [3]வேரா ளபயமுன் மதியென் பாளுந்
துளங்கிய மெய்ய ருள்ளந் துளங்கலர் தொழுது நின்றார்.

முன்பாடம் :—[1]உளங்கொள. [2]னுருசி. [3]நீரா ளபயமா.

பொழிப்புரை :—மனத்தில் (ஸ்ரீ ஜின தருமம்) நல்லொழுக்கம் நிறைந்த சிராவகர் கூட்டத்தினைச் சேர்ந்தவரில், இவ்வளவு கற்றுள்ளான் என்று அளவிட்டு அறிதற்கு அரிய கல்வியை உடைய அபயருசி என்பவனும், அவன் தங்கை குளிர்ந்த சந்திரன் போன்ற அழகிய முகத்தினை உடைய அபயமதி என்பவளும், ஆகிய இருவரும், ஒளிபொருந்திய உடம்பினரும், மனத்தில் கலக்கம் இல்லாதவரும் ஆகி, அச்சுதத்தமுனிவரின் முன்சென்று அவரைத் தொழுது நின்றனர்.

குறிப்புரை :—மலிந்த—நிறைந்த. கொள்கை—ஸ்ரீஜின தருமம்; நல்லொழுக்கம். (தாங்கருங்கொள்கை—மேருமந்.—124) உபாசகர் — சிராவகர். அபயமுன்ருசி — அபய என்ற சொல்லின்முன் ருசி என்ற சொல் கூடிய பெயர்; (அபய + ருசி) அபயருசி. இளம் — குளிர்ந்த; இளமைவிகாரம். பிறை — சந்திரன். ஏர் — அழகு. அபயமுன் + மதி— அபய என்ற சொல்லின் முன்மதி என்ற சொல் கூடிய பெயர்; (அபய + மதி) அபயமதி. உள்ளம்—மனம். துளங்கலர்—கலக்கம் இல்லாதவர்.

சிறப்புரை :—தங்கை அபய முன் மதி—" அன்னவர் தம்முள் முன்னு னபயமுன் ருசியுந் தங்கை, யன்னமென்னடையினுளா மபயமுன் மதியேன்பாளும்" (இந்நூல்—4வது சரு. 34. செய்.) " நீராள் " எனப் பாடங்கொள்ளின் மோனைத்தொடை இல்லாகின்றது. " அளந்தறிவரிய செய்கை " (சூளாமணி-மந்திர-82) உளமதில் மலிந்த கொள்கை—என்பதற்கு, மனத்தில் பொருந்திய நல்லொழுக்கம் உடைய, எனவும் ஆம். " எரிமுழ்கியனைய கோள்கை " (மேரு மந்.—736) (உ௫)

அபய ருசியும் அபய மதியும் சரிதை போதல்.

26. அம்முனி யவர்க டம்மை யருளிய மனத்த [1]ராகி
வம்மினீர் பசியின் வாடி வருந்திய மெய்ய ரானீ
ரெம்முட னுண்டி மாற்று தின்றுநீர் சரிதை போகி
நம்மிடை வருக வென்ன நற்றவர்த் தொழுது சென்றார்.

முன்பாடம் :—[1]ஞகி.

போருள் :—மூன்றாவது அடியை, நீர் இன்று எம்முடன் உண்டிமாற்றாது சரிதை போகி, என மொழிமாற்றுக.

போழிப்புரை :—அச்சுதத்த முனிவர், தம்மை வணங்கி நின்ற அபய ருசியையும், அபய மதியையும் பார்த்து, அவர்களிடத்தே அன்பு பொருந்திய மனத்தினராய், வாருங்கள், நீங்கள் இருவரும் பசியினால் இளைத்து வருந்திய உடம்பினர் ஆயினீர்கள். ஆதலால், நீங்கள் இன்று எம்முடன் உண்ணு நோன்பைக் கொள்ளாமல் சரிதை சென்று, உணவு உட்கொண்டு எம்மிடத்தில் வாருங்கள் என்று சொல்லினார். அவ்விருவரும், நல்ல தவத்தினை உடைய அம்முனிவரை வணங்கிச் சரிதை சென்றார்கள்.

குறிப்புரை :—அம்முனி—அச்சுதத்த முனிவர். உணவு மாற்றாது—உண்ணு நோன்பைக் கொள்ளாமல்—சரிதை போகி—பிச்சைக்குச் சென்று. நற்றவர்—சுதத்த முனிவர்.

சிறப்புரை :—சரிதை—சரியாமார்க்கம், சரிகை எனவும் வழக்கு. அது ஜைனதுறவிகள் பிச்சை ஏற்று உண்ணலின் பரியாயப் பெயர். " முனிவன் புக்கான் அந்நகர்ச் சரிகைக்கு என்றே" (மேருமந் 849.) (உ௬)

அவ்விருவரும் பிச்சைக்கு இராசபுரத்துள் போதல்.

27. வள்ளிய மலருஞ் சாந்து மணிபுனை கலனு மின்றாய்
வெள்ளிய துடையொன் றாகி வென்றவ ருருவ மேலார்
கொள்ளிய லமைந்த கோலக் குல்லக வேடங் கொண்டு
வள்ளலு மடந்தை தானும் வளநகர் மருளப் புக்கார்

பொருள் :—இயல் கொள் வள்ளலும், மடந்தை தானும் வள்ளிய மலரும் சாந்தும் மணிபுனை கலனும் இன்றாய் வெள்ளியது உடை ஒன்றாகி வென்றவர் மேலார் உருவம் கோலம் அமைந்த குல்லக வேடம் கொண்டு வளநகர் மருளப் புக்கார்.

பொழிப்புரை :—அழகு பொருந்திய அபய ருசியும், அபய மதியும், சிறந்த மலரும் சந்தணம் முதலிய கலவைச் சாந்தும், இரத்தின மணிகள் பதிக்கப்பட்ட ஆபரணங்களும், இல்லாதவர்களாய், வெள்ளியதாகிய உடை ஒன்றனையே உடையவர்களாய், ஐம்பொறிகளையும் வென்றவர்களாகிய மேன்மைபொருந்திய சாதுக்களைப்போன்று, அழகு பொருந்திய குல்லகவேடங் கொண்டு அவ்விராசபுரத்தில் வாழும் மக்கள் மருட்சி அடையும்படி அந்நகருள் புகுந்தார்கள்.

குறிப்புரை :—இயல்—அழகு. மேலார்—மேன்மைபொருந்திய. வென்றவர் உருவம்—சாதுக்கள் வடிவம். குல்லகம்—க்ஷுல்லகம் என்ற வடமொழித்திரிபு. வள்ளல்—அபயருசி. மடந்தை—அபயமதி. தான்—அசை. வளநகர்—இராசபுரத்தில் வாழும் மக்கள்; ஆகு பெயர்.

சிறப்புரை :—வேன்றவர்—இருடிகள்; "வென்றோர் பெருமான்" (சீவக சிந். 2814) (உ௭)

(தொடரும்.)

மணக்குடவரும் பரிமேலழகரும்

(திரு. K. கோவிந்தன், தமிழ்மாணவன், ஔவைத்தமிழகம் திருவத்திபுரம்)

(முற்றொடர்ச்சி துணர். 13 மலர். 7 இதழ் 269)

இனி, இக்குறளிற்கு "இருவினையும் சேராத இறைவன் புகழ்புரிந்தார் மாட்டுப் பொருள் சேரும் (புரியார் மாட்டு இருள் சேரும்)" என்று பொருள் கூறுவாருமுளர். இதனல், இருள்சேர், பொருள்சேர் எனவரும் முதனிலையுரிச்சொற்கள் இரண்டும் முற்றாதலும், சேரா என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாதலும் பெற்றும். முதனிலையுரிச்சொற்கள் முற்றுப்பொருளவாதல் யாண்டும் இன்மை யானும், சேரா என்ற ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஈறு புணர்ந்து கெட்டது போன்றே அதனல் விசேடிக்கப்பட்ட இறைவனும் இருவினைகளையும் ஒருகாலத்துப் புணர்ந்துநின்று இதுபோது அவற்றின் நீங்கியுள்ளான் என்று பொருள்பட்டு, இறைவன் தன் இயல்பாகவே பாசங்களின் நீங்கற்றன்மைக்கு இழுக்குண்டாம் ஆதலானும், அவர் உரை பொருந்துமாறு இல்லையென்க.

6 "பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"

இக் குறளிற்கு இருவர் கூறும் உரையும் ஒன்றே. மணக்குடவர் நீடுவாழ்வார் என்பதை எழுவாயாகவும், நெறிநின்றார் என்பதைப் பயனிலையாகவும் கொண்டார். அழகியார், அவ்வாறின்றி மாற்றிப் பொருள் கொண்டார். நீடுவாழ்வார் என்பதற்குப் "பிறப்பின்றி எக்காலத்தும் ஒருதன்மையராய் வாழ்வார்" என்றார் அழகியார். "இன்பமுண்டேல், துன்பமுண்டாம் ஆதலின்" அவ்விரண்டும் இல்லையென்பார் ஒருதன்மையராய் வாழ்வார் என்றார். பிறப்பின்றி எனவே, பிணி, மூப்பு, இறப்புக்களும் இல்லையென்பது பெறப்பட்டது. படவே, "எக்காலத்தும்" என்றல் வேண்டா கூறலாம் என்க. இனி, "தோற்றமுண்டேல் மரணமுண்டாம்" எனவே தோற்றமின்றேல் மரணமின்றும் என்பது பெறப்பட்டது. இதையுட்கொண்டே மணக்

குடவர், "இது சாவில்லை யென்றது" என்றனர் நீடுவாழ் வார் என்பதற்கு "அழிவின்றி வாழ்வார்" என அழகியார் பொருள் கூறியதூஉம் காண்க. (குறள் 3)

நெறிநின்றார் நீடுவாழ்தலாமாறு :—

இறைவன் ஐந்தவித்தான் எனவே அவா வற்றவனுதல் பெறப்பட்டது. அவாவற்ற இறைவனைச் சார்ந்தவரும் அவா வற்றவரேயாவர். (அஃதாமாறு அடுத்த குறளின்கண் விளக்கு வாம்) செல்வம் என்பது சிந்தையின் நிறைவே அல்கா நல்குரவு அவாவெனப்படுமே" என்பர் ஆதலின், அவாவற்றார், நிறைந்த சிந்தையினராதலும், செல்வமுற்றாராதலும் பெறப்பட்டன. அத்தகையார்க்குக் கவலையின்றாம். (அஃதறு கலைக்கூறும் "தனக் குவமையில்லான்" என்ற குறளை இதன்பின் வைத்ததும் கண்டு நோக்கற்பாலது) கவலையுற்றவர் உடல் அக்கவலையானே, நலங்குன்றிக் கெடுதல் கண்கூடு. இக்காலத்தும், உடல் நலம் குன்றியிருப்பாரைக்காணின் "பாவம் கவலையதிகமாயிற்று" என்றும், உடல் நலம் நன்கு வாய்க்கப் பெற்றாரைக் காணின் "கவலையற்றசிவன்" என்றும் மக்கள் கூறுவதும் அறிதற் பாலது. ஆதலின், கவலையற்றவர், உடல்நலங்குன்றாது வாழ் வார் என்பது பெறப்பட்டதூஉம் காண்க.

7 "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது"

இக்குறளிற்கு இருவர் உரைக்கும் உரைகளும் ஒன்றே எனினும், விசேடவுரையில் அழகியார், "தாள் சேராதார் பிறவிக்கேதுவாகிய, காம, வெகுளி, மயக்கங்களை மாற்றமாட் டாமையின் பிறந்து அவற்றான் வருந்துன்பங்களுள் அழுந்துவ ரென்பதாம்" என்றனர். மணக்குடவர், "வீடுபெறலாவது அவலக்கவலைக் கையாற்றினீங்கி, புண்ணிய பாவமென்னும் இரண்டினையும் சாராமற் சாதலும் பிறத்தலும் இல்லாததொரு தன்மையை எய்துதல். அது பெறுமென்பார் முற்படக்கவலை கெடுதல் வேண்டுமாகலானும், அதன்பின்னர் மற்றவை கெடு தல் ஒருதலையாகலானும், அடுத்த குறளால் காமமுதலியன கெடுதலைக் கூறுகின்றார் ஆகலானும், அழகியார் தாள் சேரா தார், பிறவிக் கேதுவாகிய, காம, வெகுளி மயக்கங்களை மாற்ற மாட்டாமையின்" என இக்குறளுரையில் கொண்டுகூட்டல் பொருந்தாதாம் என்க.

இனி, உவமையில்லாதான் தாள் சேர்ந்தார் கவலையற்றார் ஆதல் வருமாறு:—இறைவன், உவமையில்லாதான் எனவே, ஒப்பாரும், மிக்காரும் இல்லாதான் என்பது பெறப்பட்டது. ஒப்பாரும், மிக்காரும் உளராய வழியே கவலையுண்டாம்; அவர் இலர் எனவே, இறைவன் கவலையற்றவனாதல் தெளியப்பட்டது. "பாலொடளாய நீர்பாலாகுமல்லது, நீராய் நிறந்தெரிந்து தோன்றாதது" போல, கவலையற்ற இறைவனைச் சார்ந்தவரும், கவலையற்றவரேயாயினார் "நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும் மாந்தர்க், கினத்தியல்பதாகும் அறிவு" என்பது வள்ளுவர் வாக்கன்றோ? எனவே, அவனைச் சாராதார் "மனக்கவலை மாற்ற லரிது" என்றார்.

8. "அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது."

மாணாக்கர்க்குணர்வு பெருகல்வேண்டி அறவாழியெனவே, அதன் பிற என்றது பொருள் இன்பக் கடல்களை என வெளிப்படக் கூறாது மணக்குடவர் உய்த்துணர வைத்ததை அழகியார் விரித்துரைத்தார். "துன்பக் கடலிடைத் தோணித் தொழில் பூண்ட தொண்டர் தம்மை, இன்பக் கரைமுகந்தேற்றும் திறத்தன............ஐயாறன் அடித்தலமே"* (நாவரசர். ஐயாறு. 4: 92: 6.) என்று நாவரசப் பெருந்தகையார் கூறுமாறும் உணர்க. அழகியார் இக்குறளை, ஏகதேச உருவக அணியாகக் கொண்டார். மணக்குடவர் அவ்வாறு கொண்டிலர்.

9 "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை"

மணக்குடவர் உரை:—அறிவில்லாத பொறிகளையுடைய பாவைகள் போல, ஒருகுணமும் உடையனவல்ல, எட்டுக்குணத்தினை யுடையவன் திருவடியினை வணங்காத தலையினை யுடைய உடம்புகள். உயிருண்டாகில் வணங்குமென்றிழித்து உடம்புகள் என்றார். என்பது.

பரிமேலழகர் உரை:—தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள் போலப் பயன்படுதல் உடைய

---

* Footprints, that perhaps another,
Sailing O'er life's solemn main
A forlorn and shipwrecked brother,
Seeing, shall take heart again.—H. W. LONGFELLOW.

வல்ல; எண்வகைப்பட்ட குணங்களையுடையானது தாள்களை வணங்காத தலைகள். என்பது.

இக்குறளிற்கு, இருவர் உரையும், பொருள் அளவில் பொருந்துமாயினும், சொல்லளவில் பொருந்துதல்இல. அழகியார், "கோளில் பொறி", "தலை" என்பவைகளுக்கு முறையே, தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள் என்றும், தலைகள் என்றும் இயற்பெயராகவே கூறியுள்ளார். மணக்குடவர், அவைகளுக்கு முறையே, அறிவில்லாத பொறிகளையுடைய பாவைகள் என்றும், தலையினையுடைய உடம்புகள் என்றும், ஆகுபெயராகக் கொண்டு பொருள் கூறியுள்ளார்.

ஒருசொல் இயற்பெயராகவே நின்று பொருளை விளக்குவதாக, அதனை ஆகுபெயராகக் கொண்டு பொருள் கூறல் குற்றமாம் எனின்? அறியாது கூறினாய்; என்னை? ஒருசொல் இயற்பெயராகவே நின்று பொருளை விளக்குவதாகவும், அதனை, ஆகுபெயராகக் கொண்டு பொருள் கூறல், கேட்பார் பொருளை எளிதில் உணர்தற்கன்றே?

ஈண்டும், தன் தொழிலைச் செய்யமாட்டாத உறுப்புகள் போல பயனுடையவல்ல என்று கூறுவதினும், பாவையின் உறுப்புகள் போல பயன்படுதல் உடையவல்ல என்றல் பொருளை எளிதில் விளக்குதலின், மணக்குடவர் அவற்றை ஆகுபெயராகக் கொண்டு பொருள் கூறியது குற்றமாதல் யாண்டையதென்க.

10 "பிறவிப் பெருங்கடல் நீத்துவர் நீந்தார்
இறைவனடி சேராதவர்" என்பது மணக்குடவர் கொண்ட பாடம்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்

என்பது அழகியார் கொண்டபாடம்; இரண்டிடத்தும் தளை கெடுதல் இன்மையின் இரண்டும் பொருந்துவனவேயாம்.

இக்குறளிற்கு இருவர் கூறும் உரையும் ஒன்றே.

(தொடரும்)

அப்பூதியடிகள்

திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் M. A.
அண்ணாமலைநகர்

திங்களூரில் அப்பூதியடிகள் என்னும் அந்தணர் திருநாவுக்கரசரைக் காணும் முன்னரே கலந்த அன்பினராய் இருந்து வந்தார். அடிகள் திருநாவுக்கரசரது அடிமைத்திறத்தையும் ஆண்டவனது அருளையும் கேட்டறிந்தாராதலினாலும், ஆண்டவனுக்குத் தொண்டு புரிவோர் இம்மையிலும் உய்தி உறமுடியும் எனப்பிறர் பலர் தெரியுமாறு ஆண்ட அரசினது திருத்தொண்டு திகழ்ந்த காரணத்தினாலும் அப்பூதியடிகள் திருநாவுக்கரசரின் திருப்பெயரால் மடங்கள், தண்ணீர்ப்பந்தர்கள், சாலை, குளம், சோலை, கிணறு முதலானவற்றையமைத்தார். மேலும் அவர் இல்லத்தின்கண்ணுள்ள அளவு கருவிகள், மாடுகள் எல்லாம் திருநாவுக்கரசர் என்னும் திருப்பெயராலேயே அழைக்கப்படுவன ஆயின. ஒருநாள் அப்பர்சுவாமிகள் திருப்பழனத்தில் கோயில்கொண்டுள்ள இறைவனை வழிபட்டுத் திங்களூரையடைந்து தண்ணீர்ப்பந்தர் முதலானவற்றைக் கண்டு, இப்பந்தர் இப்பெயரிட்டு இங்கு அமைத்தார் யாவரென அறிய விரும்பி வினவ, சிலர் காட்ட, அப்பூதியடிகளது இல்லத்திற் சென்று சேர்ந்தார். வந்திருப்பவர் இன்னாரென்று அடிகள் அறிந்திலர்; வந்தவர் அடிகளை நோக்கி "இப்பந்தர் முதலானவற்றை உம்பேரால் எழுதாது வேறொரு பேரால் என் எழுதுவித்தீர்" என்றவாறு கேட்க அவர் வெகுண்டு "நீர் யார்" என வினவச் சூலைநோயால் ஆட்கொள்ளப்பட்ட சிறுமையேன் யான்" என விடை பகர்ந்தார். கேட்டவுடன், அடிகள் கை குவிந்தன; கண்ணீர் சொரிந்தன. அவர் வந்தவர் அடிகளில் வீழ்ந்து வணங்கி, இல்லில் உள்ளவரையெல்லாம் அழைத்து வணங்குமாறு செய்து பூசனைகள் பல செய்தார். பின்னர் ஆண்ட அரசினுக்கு அமுது செய்விக்கும்பொருட்டு உட்புகுந்து மனைவியுந் தாமுமாக அமுதாக்கலுற்றார். இடையே தமது மூத்த சேயை அழைத்து, வாழைக்குருத்து விரைவில் கொண்டுவருமாறு கூறித் தனியே விட்டார். அவன் அரவால் தீண்டப்பட்டானாயினும், ஓடிவந்து குருத்தைத் தாய்கையில் நீட்டித்தன் கடமையைச் செய்து கீழே வீழ்ந்தான். வீழ்ந்த

வீனப் புறக்கடையிற் பாயினுள் மூடிவைத்து அரசினை உண்ண அழைத்தனர் அடிகள். அவர் உண்ணுமுன் திருநீறு அளிக்குங் கால், மூத்தபிள்ளையைக்காணுது 'காட்டுக' எனக்கேட்க, அவன் இப்பொழுது உதவான் என அடிகள் அறைந்தார். அரசர் தடுமாற்றமுற்று உண்மையைக் கூறுமாறு பணிக்க, அடிகளும் நிகழ்ந்ததைக் கூறினர். உடனே, அரசர் ஆவிதீர்சு வத்தைக்கோயிலின்முன் கொண்டு வருமாறு செய்து பாவிசைப் பதிகம் பாடிப்பணிவிடம் பாற்றுவித்தார். பின்னர் அடிகளாரது விருப்பத்தை அறிந்து, அரசும் அவரது இல்லத்திற்கு வந்து அப்பூதியடிகளோடும் அவர் புதல்வர்களோடும் இருந்து உண் டார். அதன் பின்னரும் பலநாள் திருநாவுக்கரசர் அப்பூதி யடிகளோடு திங்களூரிலேயே இருந்தருளித் திருப்பழனம் செல்லலுற்றூர். அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் பொற்றுளே எப்பொருளும் எனக் கருதி வழிபட்டு உய்தியடைந்தார். இதுவே இவ்வரலாற்றின் சுருக்கம், இனி, இவ்வரலாற்றை யொட்டி அறியக்கிடக்குஞ் சில செய்திகளைக் காண்போம்.

அடிகளுடைய மக்களும் ஆண்ட அரசின் அரும்பெயரால் அழைக்கப்பட்டனரென அப்பூதியடிகள் புராண இரண்டாவது செய்யுளால் அறிகிறேம்:

"அளவைகள் நிறைகோல் **மக்கள்**............
அரசின்நாமம் சாற்றும் அவ்வொழுக்கலாற்றூர்."

இம்மக்கள் ஆண்மக்களா பெண்மக்களா என்பது சிந்திக்கத் தக்கது. இப்புராணத்தில் மக்கள் என்ற பொதுச்சொல்லே இவ்விடத்தில் காணப்பட்டாலும், திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தில் (செய். 201)

"தம்தனயருடன் சாலைகூவல் குளம்தரு தண்ணீர்ப்
பந்தர்பல ஆண்ட அரசெனும்பெயரால் பண்ணினமை"

என இச்சந்தர்ப்பத்தில் வருதலால், அடிகளுடைய ஆண் மக்களே திருநாவுக்கரசு எனுந் திருநாமத்தால் அழைக்கப்பட்ட ரெனத் தோன்றும். இது இன்னும் சில செய்திகளால் வலியுறு கின்றது.

திருநாவுக்கரசர் தம் இல்லத்தில் வந்துள்ள உவகை யுரையை அடிகள் இல்லவர்க்கும் மக்களுக்கும் உரைத்து, மனைவி மக்களோடும், சுற்றத்தொடும் வந்து இறைஞ்சினர் என அடிகள் புராணச்செய்யுட்கள் (19, 20) கூறுகின்றன. ஆனல் சுவாமிகள்

புராணச் செய்யுள் ஒன்றால் (202) அடிகள் மனைவி, மைந்தர் சுற்றத்தொடு வந்து தொழுதாரென அறிகிறோம். ஈண்டுப் ஒருபுராணம் மக்களென்னும் பொதுச்சொல்லை வழங்கியிருப்ப, மற்றொரு புராணம் மைந்தரென்னும் ஆண்பாற் சொல்லையே வழங்கியுள்ளமை காண்கின்றோம். அடிகள் புராணச் செய்யுள் பிறிதொன்றில் (23) "தங்கள் சேயவர் தம்மில் மூத்த திரு நாவுக்கரசு" வாழைக்குருத்து கொண்டுவர அனுப்பப்பட்டா னென்ற செய்தி உரைக்கப்படுவதாலும், இதுவரை கண்ட இடங்களில் மக்கள், தனயர், மைந்தர் ஆகிய பலர்பாற் சொற்களே காணப்பட்டிருப்பதாலும் அப்பூதியடிகளுக்கு மகவு ஒன்றுக்குமேல் இருந்திருத்தல் வேண்டுமென்பது திண்ணமாய் அறியப்படும், இரண்டிற்கு மேற்பட்ட மக்கள் இருந்திருத்தல் கூடும் எனற்குரிய சான்று ஒன்றும் புலப்படுகின்றது. புதல்வன் மூத்த திருநாவுக்கரசு பாயிடை ஒருபால் மூடப்பட்டுக்கிடக் கின்ற தறுவாயில், உண்ண உட்காருமுன்னே திருநாவுக்கரசர் அடிகளுக்கும், அவர் மனைவியாருக்கும் திருநீறுநல்கி, அவர் மக்களுக்கும் அளிக்கலுற்றார் என்ற இடத்தில் அடிகள் புராணத்திற் காணப்படுவது: "புதல்வர்க்கும் அளிக்கும் போழ்தில்" (செய். 31) என்பது. அந்நிலையில், "காதலர் இவர்க்கு மூத்தசேயையுங்காட்டும்மூன்னே மேதகுபூதிசாத்த" எனச் சுவாமிகள் கூறியசெய்தி அடுத்த செய்யுளால் தெரிகிறது. இதனால் அறியப்படுவது ஒருபால் மூடப்பட்டுக் கிடக்கும் மூத்த திருநாவுக்கரசு நீங்கலாக, அப்பர் சுவாமிகள் எதிரே இரண்டு மக்களுக்குக் குறையாமல் காணப்பட்டன ரென்பது அங்ஙனம் காணப்பட்டவர்தாமும் புதல்வரே என் பதும் புலனாம். எதிரே ஒரு குழந்தையைக் கண்டும் சுவாமிகள் ஏதோ ஒரு காரணத்தால் பலர்பாற் சொல்லால் "காதலரிவர்" என்று சொன்னார்கள் என்பது ஒவ்வாது. மூத்த பிள்ளையையே "என்செய்தான்" (அடிகள். செய். 33) என்றவாறு ஒருமைச் சொல்லால் சுட்டும் சுவாமிகள் இளைய பிள்ளை ஒருவனைக் காதல ரிவர் என்றார் என்றல் பொருந்தாது, சேக்கிழார்பெருமானும் மைந்தனைச் சுட்டுமிடத்து எல்லாம் இப்புராணத்தில் ஒருமையி லேயே வைத்துச் செப்பியுள்ளார். "பரிவொடு வணங்கி மைந் தர்க் குற்றது பகர்ந்தாரன்றே" (அடிகள். செய். 34) என்று சேக்கிழார் சொன்னாரல்லர். பதிப்பித்தவர்களிற் சிலரே அங் ஙனம் காட்டியுள்ளனர். இவ்விடத்திற் சரியானபாடம் "மைந் தற்குற்றது" என்றுதான் இருக்க முடியும். இப்பாடமே திரு வாவடுதுறை ஆதீனத்து அம்பலவாணதேசிகர் ஆணைப்படிப்

பதிப்பித்துத் திரு. செந்தில்வேலு முதலியார் 1903-ல் வெளியிட்ட பெரிய புராணத்தில் காணப்படுகின்றது. இனி, சுவாமிகள் அமுது செய்ய உட்கார்ந்த பிறகு அடிகளைப் பிள்ளைகளுடனே பார்த்து "அரும்புதல்வர்களும்நீரும் அமுது செய்வீர் இங்கு" (அடிகள். செய். 40) என்று கூறியதாக அறிகிறோம். எதிரே புதல்வியர் நின்றிருந்தால் மக்களும் நீரும் அமுது செய்வீர் என்று சொல்லியிருப்பர். அன்றி இல்லத்தின் கண்ணே அடிகளது பெண்மகவு இருந்திருக்குமாயின், தன்னுடன் பிறந்தாரும் தந்தையும் உண்ண அமர்ந்திருப்பதையறிந்தவுடன் அது அழையாமலும் வந்து உண்ண உட்காரத் தலைப்பட்டிருக்கக் கூடும். அங்ஙனம் வந்து உட்கார்ந்ததாகப் புராணத்தால், அறிகின்றோமில்லை. ஆனால் மைந்தரும் அடிகளும் சுவாமிகளோடு இருந்து அமுது செய்தனர் எனவே அறிகிறோம். வழக்கம்போல் அப்பூதியடிகள் அகத்தில் உண்ண வந்திருந்த அடியாரும் உடன் உண்டசெய்தியைச் சேக்கிழார் கூறுகின்றவர் (அடிகள். செய். 41) பெண் மகவு இருந்து உண்ணவந்து உட்கார்ந்திருக்குமேயானால் உரையாது விட்டிரார் என நினைத்தல் தவறன்று, இக்காரணங்களால் அப்பூதியடிகள் புராண நிகழ்ச்சி கூறப்படும் சமயத்தில், அஃதாவது ஆண்ட அரசை அப்பூதியடிகள் கண்டு வழிபட்ட நாளில், அப்பூதியடிகளுக்குப் பெண் மகவு இல்லையென்பதும், ஆண்மக்கள் மூவர்க்குக் குறையாமலிருந்தனரென்பதும் ஊகித்தறியக்கூடும்.

இனி, அப்பூதியடிகளது சிறப்பு இப்புராணத்திற் குறிப்பாயும் ஒருவகையான் உணர்த்தப்படுவது காணத்தக்கது. அப்பர் சுவாமிகள்பால் வைத்த ஆராதகாதலாலே முன்செய்வதெது, பின்செய்வதெது என்று அறியாது அப்பூதியடிகள் ஆர்வமுற்றார் என்று ஒரு பாட்டால் (அடிகள். 19). அறிகின்றோம். இவ்வாராத காதலே, குறையாத வேட்கையே காமமெனப்படும். இறையனாரகப் பொருள் (சூத். 30) "காமமிக்க கழிபடர் கிளவி" என வரும் சூத்திரவுரையில் "காமமென்பது வேட்கை" என்றே கூறப்பட்டுள்ளது. திருநாவுக்கரசரை எத்துணை விரும்பினர் அப்பூதியடிகளாரென்பது, அவர்புராணம் முழுதும் ஓதினர் அறிந்ததே. ஆதலின், அப்பூதியார் அப்பர்பால் வைத்தகாமம் பெரிது என்பது எளிதில் தெளிவாம். தாம் முன்னரே கடிந்தொதுக்கிய காமம் பின்னர் வந்துசேர இடங்கொடுத்தார் அப்பூதியார் என இதனல் அறிகின்றோமாதலின், காமமின்மையாகிய குணத்தைப் பேணுதலை நீத்துத்

தியாகஞ் செய்யவும், காமமுறுதலாகிய குற்றத்தை மேற்கொண்டு இடர்ப்படவும் திருநாவுக்கரசர் பொருட்டுக் காத்திருந்தார் மேதகு அடிகளார் என்று கூறலாம். "**காமம், களவு, பொய், கோபம் முதலிய குற்றங் காய்ந்தார்**" இவரெனப்புராணம் (அடிகள். செய். 2.) கூறுகின்றது. அந்நிலை அப்பூதியார் ஆண்ட அரசினைக் காணுமுன் இருந்த நிலை. வடிவைக்கண்ட பிறகு வந்த நிலை வேறு. அவ்வேறான நிலையில், களவின்மை, பொய்யின்மை, கோபமின்மை ஆகிய குணமெனச் சொல்லத் தக்கன வெல்லாம் தியாகஞ் செய்யப்படுகின்றன.

இதன் உண்மையினை இனிக் காண்போம். முன்னாக் களவினை அகற்றியிருந்தவர் அப்பர் சுவாமிகள் அமுது செய்யும் பொருட்டுக் களவினை மேற்கொண்டார் என்பது பெறலரும் புதல்வனைப் பாயினுட் பெய்து மூடினமையால் (அடிகள். 29) அறியப்படும் என்க. பிறர் அறியாவாறு மறைத்தல் களவன்றோ? ஐயமிருப்பின், "அம்பலும் அலருங் களவு" என்னும் இறையனாரகப்பொருள் சூத்திர (22) உரையின்கண் வரும் "களவென்பது செய்தாரே யறிந்து மற்றொருவர் அறியாதது" என்பதால் தேறப்படும். அப்பர் அறியக் கூடாது என்று அப்பூதியடிகள் மறைத்தது களவாகாதோ? ஆகுமேல், அப்பர்சுவாமிகள் பொருட்டு எத்தீய செயலையும் செய்வதற்கு இரங்கினாரல்லர் அப்பூதியார் என்பது போதரும். இதுவும் அளவிலா அன்பை யன்றோ காட்டுகின்றது !

முன்னரே கடியப்பட்டிருந்த பொய் பின்னர் அப்பர்பால் உள்ள பேரன்பினால் அப்பூதியடிகளால் மேற்கொள்ளப்படுகிறது எனற்குரிய சான்றை இனிக் காண்போம். மெய்யென்பது நடந்ததை நடந்தவாறு ஐயமற வுரைத்தல் என்பது உண்மையானால், திருநீறு இட மூத்த சேயைக் காட்டுமாறு அப்பர் வினவியக்கால் இவர் "இப்போதிங்கவன் உதவான்" (அடிகள். 32) என்றவாறு அவன்விடம் தீண்டியதால் வீந்தானே என்று கருதப்பட்டுக் கிடக்கின்ற நிலையைச்சொல்லாமல் இருபக்கமும் பேசுமாறும் தெளிவில்லாமலும் சொற்களை வைத்துச் சொல்லியது வாய்மையன்று என்னலாம். வாய்மையல்லாதது பொய்யாயின், இவர் கூறியது பொய் எனல் கூடும். இங்ஙனம் இவர் பொய்யுரைத்தார் எனக் கொண்டால் அதுவும் ஆகும் இவரது பெருமைக்கே; திருநாவுக்கரசர்பால் வைத்த மீளாக்காதலன்பினால் இஃதுரைக்கப்பட்டது என ஏற்படுதலின் என்க.

மேல், முன்னர் வெறுத்து ஒதுக்கப்பட்டிருந்த கோபமும், பின்னர் அடிகள்பால் காணப்படுகின்றது வியப்பன்று. இதுவும் சுவாமிகளிடத்து இவர் உற்ற விருப்பினாலும், சுவாமிகளை விரும் பாத பிறர்பால்கொள்ளும் வெறுப்பினாலும் வந்துற்றதேயென்க. "நீர்வைத்த தண்ணீர்ப்பந்தரில் நம்பேர் எழுதாது வேறொரு பேர் முன்னெழுத வேண்டிய காரணமென்கொல்" (அடிகள் 12) எனக் கேட்ட பெரியவரிடத்துச் சீற்றங்கொண்டார் செப்பருஞ் சீர் அப்பூதியார் என அறிகிறோம். திருநாவுக்கரசர் திருப் பெயரையே எழுதியும், சொல்லியும், கருதியும் வந்த அப்பூதி யார் தம்மால் அத்துணைப் போற்றப்பட்டுவரும் பெரியாரது திருப்பெயரைச் சொல்லவும் நாக் கூசி "வேறொருபேர்" என்ற வாறு அறைந்தார் கேட்டவர் என உட்கொண்டு வெகுண்டு, வெகுளியை அடக்காது நின்றார் என்பது "திருத்தொண்டின் உறைப்பாலே வென்றவர்தம் திருப்பேரோ வேறொருபேர் என வெகுள்வார் அடிகள்" (அடிகள். 13) என்னும் சொற்களால் சேக்கிழார் பெருமானாற் காட்டப்படுகின்றது. இவ்வெகுளிக் குக் காரணம் ஆண்ட அரசுபால் அடிகளுக்கு ஈண்டிய காதலே யென்க.

இவ்வாறெல்லாம் நோக்கின் அப்பூதியடிகள் மனைப் பாலுள்ள மக்களும், மாடும், சோலை, குளம், காவும் பிற பொருள்களும் அப்பர் சுவாமிகளே என நம்பிப் போற்றி வந்தார் என்பதன்றிக் குணங்களெல்லாமும் அப்பர் சுவாமிகள் திருவடி போற்றுதலே என்று வழிபட்டு உய்ந்தார் என்பதும் புலனும்.

" இவ்வகை யரசின் நாமம் ஏத்தி யெப்பொருளும் நாளும்
அவ்வருந்தவர் பொற்றாளே எனவுணர்ந்தடைவார் "

என்ற சேக்கிழார் வாக்கு (அடிகள். 44) இவற்றையெல்லாம் அடக்கிநிற்றல் பேரின்பம் பயக்கிறது. உண்மையும் பிழம்பும் உணர்த்தப்படுவன (the concrete) ஆகிய மக்கள், மாடு, சோலை, கூவல், ஆதிய வெல்லாம் திருநாவுக்கரசரே என்று அப்பூதி யடிகள் கருதியவாறு போலவே, உண்மை மாத்திரையுணர்த் திப் பிழம் புணர்த்தப்படாதன (the abstract) ஆகிய காம மின்மை, வெகுளியின்மை ஆதிய வெல்லாமும் திருநாவுக்கரசரே என்றுகருதி வழிபட்டு வாழ்ந்தார் என்று இதனால் ஏற்படுவ தால், சேக்கிழார் வாக்கில் வந்துள்ள " எப்பொருளும் " என்ப தன் நயம் நினைக்குந்தொறும் தேன் சொரிகின்றது.

தமிழ்ச்செய்திகள்.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை உயர்தரப்பள்ளி:— இப் பள்ளிக்கூட ஆட்சிக்கழகத்தின் அமைச்சர் திருவாளர் T. P. மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் M. A. B. L., M. O. L. தெரிவிக்கும் நற்செய்தி:—

இப்பாடசாலையில் வேலைபார்க்கும் L. T. தேறிய அங்கில ஆசிரியர்களுடன் ஒத்த நிலையில் உயர்தரத்தமிழ்ப் பண்டிதர்களையும் கருதுமாறு ஒரேசம்பளதிட்டம் ஏற்படுத்தி ஒரே தரத்தினராய் ஆக்கவேண்டுமெனும் உன்னத ஆலோசனையை ஆட்சிக்கழகத்தினர் ஏற்றுக்கொண்ட நற்செய்தியை மகிழ்ச்சியுடன் விளம்பரம் செய்கின்றேன். இனி, மேல்வகுப்புக்களை நடத்தும் உயர்தரப் பண்டிதர்கள் அதேவகுப்புகளில் வேலை செய்யும் அங்கில ஆசிரியர்களினும் தாழ்ந்த தரத்தினர் எனும் இழுக்கு இப்பாடசாலையிலாகிலும் ஒழியுமல்லவா? இந்த நன் முறையை மற்ற கலாசாலைகளிலும் ஏற்பது நலமெனக் கருதுகின்றேன்.

19—6—38உ வெளிவந்த 'ஞாயிறு நோக்குவோன்' (Sunday Observer) எனும் அங்கிலத்தாளில் வந்த திருவாளர் T. R. வேங்கட ராமசாத்திரி அவர்களின் கூற்று:—

மக்களால் தேர்ந்துகொள்ளப்பட்ட அரசியலார் கல்வியைப் பற்றிய தமது கொள்கைகளை மக்களின் தலையில் சுமத்துவது முறையுடையதல்ல. தமது கொள்கைகளைப்பிறர்மேல் சுமத்தும் உரிமை மக்களுக்கு இல்லை; தம்மால் தேர்ந்துகொள்ளப்பட்ட மந்திரிகளிடம் அவ்வுரிமையை ஒப்படைக்கவும் முடியாது.

மிகுதியான 'வாக்குகள்' (Votes) அல்லது 'அரசியல் ஆதிக்கம்' (Political Power) ஒருவர் கையில் அகப்பட்டிருப்பதனால் மட்டுமே அவர்களுடைய கொள்கைகள் திறமையுடையன வென்றாவது மதியுடையன வென்றாவது கொள்ளமுடியாது.

கல்வியைப்பற்றிய சிறந்த கொள்கைகள் ஒவ்வொரு மக்களினும் நுண்மதியுடைய ஒருசில அறிஞரிடமே காணப்பெறும்; பெரும்பாலோர் கொள்கையே இல்லாமலோ, அன்றித்தவறுபட்ட கொள்கையுடனோ இருக்கின்றனர்.

சட்டவாம்பில் 'வல்லான் வகுத்ததே நீதி' எனும் ஆஸ்டின் எனும் அறிஞர் நாட்டிய 'அரசனின்' (Sovereign) இலக்கணமே இதுபோது மதிக்கப்படுவதில்லை. கல்வித்துறையிலோ இவ்விதி வெறுத்தொதுக்கப்படுவதாகும்.

அகன்றகல்விக்கு (Liberal Education) இந்துத்தானி இன்றியமையாத அங்கமல்ல; 6, 7, 8-வது வகுப்புக்களில் பயிற்றப்படும் இந்துத்தானி பயனில் உழவாய் முடியுமென்பது சரதம். பயனற்றதாகிய இந்துத்தானிப் பயிற்சியை ஒருசில ஆண்டுகள் பயிலுவதால் அது நிலைபேறடையமாட்டாது.

மக்களுடைய வாழ்க்கையையே தனது ஆளுகையில் வைத்து நடத்தும் உரிமை தனக்கு வாய்த்துவிட்டதாக முதன் மந்திரியார் நினைத்துக்கூறுவதில், கேட்டையே விளைக்கும் கொள்கை (dangerous doctrine) உள்ளீடாக நுழைந்து கொண்டு இருக்கின்றது. இக்கூற்றுனது ஏற்கக்கூடிய அளவினை அகன்றிருக்கின்றது; இல்லாவிடில், மக்களால் தேர்ந்து கொள்ளப்பெற்ற அரசியலார் கட்டாயப்படுத்தக் கூடாத கருமம் யாதுதானிருக்கின்றது. எல்லோரும் கதராடையை அணியவே, வேண்டும்; நூல்நூற்றே ஆகவேண்டும்; என்றெல்லாம் கட்டாயப்படுத்தலாகாதா? இந்துத்தானிக் கல்வியின் பின்னெல்லாம் இருப்பதுபோலவே, அவற்றின் பின்னும் நன்னோக்கமும், நன்னம்பிக்கையும் இல்லையா? பிறருக்கு நலந்தரும் கருமம் இது எனும் கொள்கை நம்மிடமிருந்தாலும், தாந்தாமும் தமக்கு நலமானது எது எனத்தெளிந்து, தாம் நலமெனக் கண்டதையே செய்யவிடுவதுதான் முற்ற முடிந்த உண்மையாகும்.

மனிதர் மனம்போல நடப்பதால் விளையவிருக்கும் தீமை மிகப்பெரிதாயிருந்தாலன்றி, தத்தங்கருத்திற்கிசைய நடக்க விடுவதே சாலச்சிறந்த நீதி முறையாகும்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் :—திருவள்ளுவர் விழா 17-2-38ல் திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. திருவையாறு அரசர் கல்லூரித் தமிழாசிரியர், கரந்தைக் கவியரசு R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள் "திருவள்ளுவர்" என்பதுபற்றியும் சங்க அமைச்சர் திரு. நீ. கந்தசாமிப்பிள்ளையவர்கள் 'திருக்குறளின் இலக்கியப்பண்பு" என்பதுபற்றியும் அரிய விரிவுரைகள் ஆற்றினர். தலைவரவர்கள் முடிபுகூற விழா இனிது நிறைவேறியது.

வெள்ளிவிழா. 1938, ஏப்ரல் 15, 16, 17 தேதிகளில் உயர்திரு திருப்பாதிரிப்புலியூர் அடிகளார் அவர்களின் சீரிய தலைமையில், தமிழறிஞர் பல்லாயிரவர் குழுமியிருந்து மிகமிகச் சிறப்புற விழா இனிது நடைபெற்றது. தமிழன்பர்கள் சங்கத்துக்குப்புரிந்த ஆதரவு உலகினும் பெரிது. அதனால் ஆக்கம் பெற்ற சங்கம் கடமையை ஓர்ந்து செவ்வனம் தமிழ்ப் பணிஆற்ற முனைந்து நிற்கின்றது. விழாவின்போது தொடங்கியிருக்கும் தமிழ்க்கல்லூரி தழைத்துப் பூத்துக்காய்த்துக் கனிந்து பயன்தருமாறு பேணிவளர்ப்பது தமிழ்மக்களின் கடமை. இதனை இறைவன் திருவருள் கூட்டுவிக்குமாக. விழாவின் நிகழ்ச்சிகளின் விரிவு தனி மலராக வெளிவரும்.

1938 ஏப்ரல் 23, 24, 25 தேதிகளில் உயர்திரு. திருப்பாதிரிப்புலியூர் அடிகளார் அவர்கள் 'குருபக்தி' 'உயிர்' எனும் விரிவுரைகளை நிகழ்த்தினர்கள். மறுநாளாகிய 25 தேதியன்று அப்பர் திருநாளைச் சிறப்பித்தனர்.

கரந்தைத் தமிழ்ச்சங்கக் கல்லூரி எனும் தொடக்கக்கல்லூரி 1938 ஜூன் 30உயில் கோடை விடுமுறை கழிந்தபின் திறக்கப் பெற்றது.

கரந்தைத்தமிழ்ச் சங்கம்: பொதுக்கூட்டம் 11—6—38உ திரு. Sir A. T. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் நடந்தது. கீழ்க் கண்ட 1, 2, 3, 4, 5 முடிபுகள் செய்யப்பெற்றன.

I சென்னை அரசாங்கத்தார் 'இந்தியை' பள்ளிக் கூடங்களில் எல்லாமாணவர்களும் கட்டாயமாகவோ, பொதுவாகவோ, பயில முயற்சிப்பது தாய்மொழிப் பயிற்சியைத் தடைப்படுத்தி நாட்டு மக்களைப் பிற்போக்கும் அறிவற்ற தன்மையும் உடையராக ஆக்குவதால், இச்செயலை இச்சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

II இந்திமொழியைத் தொடங்கும் வகுப்புவரையில் தாய்மொழிக் கட்டாய பாடமாக்கப்படும் என்பது மக்களை ஏமாற்றுவதும் வஞ்சிப்பதாகவும் இருப்பதோடு, தாய்நாட்டுக் கலாசாலைகளின் எல்லா வகுப்புக்களிலும் ஆங்கிலத்தில் இருப்பனபோல முறைப்படுத்தப்பெற்ற இலக்கண, இலக்கிய, உரைநடை செய்யுட்கோவை நூல்கள் தாய்மொழியில் ஒவ்வொரு வகுப்பின் எல்லாமாணவர்களும் கட்டாய பாடமாகப் பயின்றாலன்றி தாய்மொழி வளர்ச்சி ஏற்படாது. ஆகையால், அத்தகைய திட்டம் ஒன்றினை ஏற்படுத்தி தாய்மொழி வளர்ச்சிக்குத்துணைபுரியுமாறு அரசாங்கத்தாரை இச்சங்கம் வேண்டி வற்புறுத்துகின்றது.

III வார்தா கல்வித்திட்ட ஆசிரிய பயிற்சிக்கு, இந்திமொழிப் புலமையை வற்புறுத்துவது "இந்திமொழி பயின்றவர்களே ஆசிரியர்களாவதற்கு உரியர்" என ஏற்படுவதால் அக்கொள்கையை இச்சங்கம் வன்மையாகக் கண்டித்து இந்திமொழி அறியாவிட்டாலும் தக்கவாறு தொண்டுசெய்யும் திறம்பெற்ற ஆசிரியர்களையே தேர்ந்தெடுக்குமாறு இச்சங்கம் வற்புறுத்துகிறது.

IV பிறபாடங்களைத் தமிழிலேயே கற்பிப்பது என்பதனால் தாய்மொழிக்கு வளர்ச்சிவராது. தாய்மொழி பயிற்சியற்ற பிறமொழிப் புலவர்கள் கொச்சைத் தன்மையுடைய பொருந்தாத இழிந்த சொற்களால் தம் பாடங்களை விளக்குவதால் தாய்மொழி கெடுமேயன்றி வளராது. ஆகையால் இத்தகைய வீண்மருட்சியினால் மக்களை ஏமாற்றாது உண்மைத்தொண்டு புரிய அரசாங்கத்தாரை இச்சங்கம் வேண்டுகிறது.

V அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப்பேராசிரியர் இடம் அண்மையில் மாற்றம் பெறும் நிலையில் இருப்பதால் அந்த இடத்துக்கு இப்போது அந்த இடத்தை வகிக்கும் தமிழ்ப்புலமை நிரம்பியவரும், தமிழ் ஆர்வம் உடையவரும், தமிழ்நாட்டு நன்மதிப்பை முழுதும் பெற்றவரும் ஆகிய பேராசிரியர் திரு. ச. சோமசுந்தர பாரதியார் M.A. B.L. அவர்களே மிகுதியும் தகுதிபெற்றவர் ஆகையாலும் அவரை ஒத்தவரும், மிக்கவரும் எவரும் இதுபோது நம் நாட்டிவில்லை என்பது உண்மையாதலானும் அவரை மறுபடியும் அத்தமிழ்ப்பேராசிரியர் இடத்துக்கே நியமனம் செய்யுமாறு அப்பல்கலைக் கழக ஆட்சியாளர் உயர்திரு. செட்டிநாட்டு அரசர் இராசா Sir. Dr. அண்ணாமலைச்செட்டியார் அவர்களை மிகவும் இச்சங்கம் வேண்டிக்கொள்ளுகிறது.

மதிப்புரை.

திருநூல் அல்லது தூய்வாழ்வு :— திரு. சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்களால் இயற்றப்பெற்று, திருச்சிராப்பள்ளி இராமச்சந்திரபுரம், அன்பு நிலையத்தாரால் வெளியிடப் பெற்றது. தூய எண்ணமும், செயலும் மனிதர் உள்ளத்தே உறைக்கவும், வாழ்க்கையின் சீரிய குறிக்கோளை மக்கள் உணரவும், கருதி எழுதிய கட்டுரைகள் இதனை அணிசெய்கின்றன. செவ்விய தமிழில், எளிய நடையில், பொருட்செறிவுடன் இயற்றப்பெற்ற பயனுள்ள நூல். இதன் விலை ரூபா ஒன்று.

உ

தமிழ்த்தாய்வாழ்க.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

உறுப்பினர் பொதுக்கூட்டம்.

1938, சூலை, 31-ஆம் நாள் ஞாயிறு மாலை 4-மணிக்கு இச் சங்க உறுப்பினர் பொதுக்கூட்டம் சங்கக் கல்லூரித் தமிழ்ப்பெரு மன்றத்திற் கூடும். கீழ்க்காணும் அலுவல்கள் எண்ணி முடிக்கப் பெறும். உறுப்பினர்கள் யாவரும் வந்தருள வேண்டும். நேரில் வரவியலாதவர்கள் எண்ண அறிவிப்புச் சீட்டினை இங்கு எழுதிப் பெற்றுத்தங்கள்கருத்துக்களை விளக்கமாக எழுதியனுப்பவேண்டும்.

போருள்கள்.

1. 1936—37, 1937—38 ஆண்டுகளின் கணக்குகளும் சோதனை அறிக்கையும்.
2. வெள்ளிவிழாவில் வெளியிட்ட சங்கத்தின் அறிக்கை.
3. வெள்ளிவிழாவின் பின்னர் நடைபெற்றுவரும் சங்க நிகழ்ச்சிகளின் அறிக்கை.
4. 1938—39 ஆண்டின் வரவு—செலவு திட்டம்.
5. வெள்ளிவிழாவின் வரவு—செலவு.
6. கரந்தைத் தமிழ்க் கல்லூரியின் திறப்பு.
7. தொழிற் கல்விச்சாலையின் திறப்பு.
8. (a) நிறைவேற்றுக் கழகத்தார் தேர்வு.
   (b) 'தனிக்கணக்கர்' (Special Auditor) தேர்வு.
9. சங்கவிதியில் கீழ்க்கண்ட திருத்தம்.
   (a) 9-வது அதிகாரத்தின் பின்னும் 10-வது அதிகாரத்தின் முன்னும் "9-a அதிகாரம்" என சேர்க்க வேண்டியது. அவ்வதிகாரத்தில் அடியிற்காணும் 7 விதிகளையும் சேர்த்து எழுதவேண்டியது.

(b) 1. இச்சங்கத்தின் நோக்கங்களுடன் ஒத்த கருத்துடைய வேறுசங்கங்களும் ஆண்டுதோறும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துக்கு இணைப்புக்கட்டணம் ரூபா மூன்று தருவதாக ஒப்புக்கொண்டு இச்சங்கத்துடன் இணைத்துக் கொள்ளலாம்.

2. இணைப்புக்கட்டணத்தை ஒவ்வொரு ஆண்டின் முடிவிற்குள் செலுத்தவேண்டும்.

3. கட்டணத்தைச் செலுத்தாது ஒரு ஆண்டுத் தொகை நிலுவையாயிருந்தாலும், இணைப்பினுலுள தாகும் உரிமைகள் கிடையாது.

4. இணைக்கப்படும் சங்கங்கள் ஒவ்வொரு உறுப்பினரைத்தேர்ந்து, இங்கு அனுப்பவேண்டும்; இங்கு கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தொழிற்கூட்ட உறுப்பினர்களும், இணைக்கப்பட்ட சங்கத்தினரால் தேர்ந்தனுப்பப் பெற்ற உறுப்பினர்களும் ஒருங்குகூடி தமிழின் ஆக்கத்திற்கான வேலைத்திட்டத்தையும் அதனைச் செய்து முடிக்கும் வழிதுறைகளையும் அமைத்து அவற்றை நிறைவேற்றவேண்டும்.

5. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் வெளியிடப்பெறும் நூல்கள் முதலியவற்றை இணைப்புச் சங்கங்கட்கு விலை இன்றியோ, நயமான விலைக்கோ கொடுக்கலாம். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தொழிற் கழகத்தினர் இதுபற்றிய முடிபுகளைச் செய்தற்குரியர்.

6. இணைப்புச் சங்கங்கட்கு, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சி முதலியவற்றில் எவ்வித தொடர்பும், உரிமையும் கிடையாது.

7. இணைப்புச்சங்கங்கள், தாம் செலுத்தவேண்டிய ஆண்டுவரியைக் கொடுக்காமல் மூன்று ஆண்டு வரித் தொகை நிலுவை நின்றால், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தொழிற்கழகத்தினர், அச்சங்கங்களின் இணைப்பை அறுத்து விலக்கிவிடலாம்.

கரந்தை
11—7—38

த. வே. உமாமகேசுவரன்,
சங்கத்தலைவர்.